# ஜனோபகாரி.

## THE JANOPAKARI.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புஸ்தகம் 3. Vol. III. | காளயுக்திஞு கார்த்திகைமீ, NOVEMBER, 1918. | சஞ்சிகை 11 No. 11.

## The Progress of the Word.

### பிரபஞ்சப்போக்கு.

**இந்தியாவின் தொழில் அபிவிநுத்தி.**

இந்தியா தேசமானது ஒரு பெரிய விவசாய தேசமாயினும், ஒரு காலத்தில் அது கைத்தொழில்களில் தேர்ச்சியடைந்த நாடாக இருந்தது. ஆங்கிலேயர்கள் முதன்முதல் இந்தியாவிற்கு வந்தபோது, இந்தியர்களால் செய்யப்பட்ட பலவித சாமான்களை அவர்கள் தங்கள் தேசத்திற்கு வாங்கிக்கொண்டுபோனார்கள். அத்தகைய உன்னத ஸ்திதியையடைந்திருந்த இந்தியத்தொழில்கள் எவ்வாறு நசித்துப்போயினவென்ற விஷயம் கவனிக்கத்தக்கது. இந்தியாவின் கைத்தொழில் அபிவிருத்தி விஷயமாய்த் தொழில் அபிவிருத்திக் கமிஷன் சிலயோசனைகளைக்கூறியிருக்கின்றது. ஆயினும், அக்கமிஷன் மெம்பர்களுள் ஒருவரான கனம் மாளவியா ஒரு முக்கியமான விஷயத்தை வெளியிட்டிருக்கிறார். அதாவது: இந்தியாவில் தொழில்கள் விருத்திசெய்யப்பட்டால்மாத்திரம் போதாதென்பதும், அவை இந்தியரால் ஸ்தாபிக்கப்பட்டு நடத்தப்பட்டாலொழிய இந்தியா அனுகூலமடையாதென்பதும் அவருடைய கருத்தாகும். 1916-ம் வருஷம் மார்ச்சு மாதம் 26ந் தேதியன்று ராஜப்பிரதிநிதியின் சட்டசபையில் தொழில் அபிவிருத்தியைப் பற்றி விசாரித்து யோசனைசொல்லும்படி ஒரு கமிடியை நியமிக்கவேண்டுமென்று கனம் ஸர் இப்ரஹிம் ரஹிம்துல்லா ஒரு தீர்மானம் கொண்டுவந்தபோது, ஸர் வில்லியம் க்ளார்க் சொன்ன அபிப்பிராயம் இங்குக் குறிப்பிடத்தக்கது.

"இந்தியாவில் இந்தியருடைய முதலைக்கொண்டு இந்தியருடைய அதிகாரத்திற்குட்பட்டு இந்தியர் நிர்வகிக்கும்படியான தொழிற்சாலைகள் ஏற்படவேண்டுமேயல்லாமல், அந்நிய தேசங்களில் தொழில்செய்யும் முதலாளிகள் தங்கள் தொழிற்சாலைகளை இந்தியாவிற்குக் கொண்டுவந்துவிடும்படி செய்துவிடக்கூடாது."

மேற்குறித்த விஷயத்தை நாம் ஊன்றிக் கவனிக்கவேண்டும். அந்நியதேசத்துத்தொழிலாளிகள் இங்குவந்து தொழில்நடத்துவதனால் அவர்கள் ஸம்பாதிக்கும் லாபம் அந்நிய தேசங்களுக்குப் போய்விடஹேதுவாகும். அப்போது இந்தியாவின் செல்வமானது நாளுக்குநாள் குறைந்துகொண்டேவருமேயல்லாது

பெருகாது. ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் என்பவர் தொழில் அபிவிருத்திக் கமிஷன் முன்பு எழுத்துமூலமாய்த் தெரிவித்த தமது அபிப்பிராயங்களில், இந்தியாவில் கிடைக்கும் மூலப்பொருள்களைக்கொண்டே தொழில் செய்யப்படவேண்டுமென்றும், இந்தியாவில் தொழிற்சாலைகள் பல ஏற்படுத்தப்படவேண்டுமென்றும், இந்தியத்தொழிற்சாலைகளால் கிடைக்கும் பணம் இந்தியாவிலேயே இருக்கவேண்டுமென்றும் தெரிவித்திருந்தார்.

ஆகையால், மேலே குறிப்பிட்ட அபிப்பிராயங்களைபொட்டி இந்தியாவில் தொழில் அபிவிருத்தி செய்யப்பட்டாலொழிய, மற்றெவ்வித முறைகளும் பலனைத்தராவென்பது திண்ணம்.

செம்படவருக்குள் கூட்டுறவு.

செம்படவரின் நிலைமையையும், ஜனாசாரத்தையும் கூட்டுறவு முயற்சியைக்கொண்டு உயர்த்தும் விஷயமாய் ஆராய்ச்சிசெய்து ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் ஒரு ரிபோர்டு எழுதி வெளியிட்டிருக்கிறார். செம்படவர்களின் நிலைமை உயர்த்தப்பட்டாலொழிய மீன் தொழில் இலாகாவின் எத்தொழிலையும் அபிவிருத்தி செய்ய இயலாதென்று அவர் கூறுகிறார். இன்னும், இந்த ஸமூஹத்தினரின் அறியாமை, செட்டின்மை, மதுபானம், கட்டுப்பாடின்மை ஆகிய பலவித குறைகளை அவர்களுக்கு எடுத்துரைத்து நன்னடக்கையைப் போதிக்கவேண்டுமென்றும், இதற்குத் தக்க ஆசிரியர்களை அவர்களுக்குள்ளேயே தேர்ந்தெடுக்கவேண்டுமென்றும், கூட்டுறவுச்சங்கங்களின் அவசியத்தையும் அவற்றின் கடமைகளையும் அவர்கள் உணரும்படிசெய்யவேண்டுமென்றும் அவர் தமது ரிபோர்ட்டில் வற்புறுத்தியிருக்கிறார். அவர் கூறும் யோசனைகள் யாவும் சிறந்தவையே. போதியவளவு இவ்விஷயத்தில் சிரத்தையெடுத்துக்கொள்ளப்படுமாயின், காரியம் சித்திபெறுமென்பதில் ஐயமில்லை.

பாடசாலைகளில் வைத்திய பரிசோதனை.

இந்தியாவில் பாடசாலை மாணவர்கள் பற்பல வியாதிகளால் பீடிக்கப்பட்டு வருகின்றார்கள். இதனால் அவர்கள் தேகபலங் குன்றித் தங்கள் கடமைகளைச் சரிவர முடிக்க இயலாதவர்களாக இருக்கின்றனர். பிள்ளைகளின் தேகவளர்ச்சியும் அறிவு பெருக்கமும் தேசத்துக்கு அவசியமானவைகளாகும். ஆகையால், தேசத்தின் நலத்தைக் கோருபவர்கள், இவர்களின் தேக சௌக்கியத்தைக் கவனிப்பது அவசியமாகும்.

மேனாடுகளில் பள்ளிப்பிள்ளைகளுக்கு வைத்திய பரிசோதனை செய்விப்பது கவர்ன்மெண்டாரின் கடமையாக இருக்கின்றது. ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு வைத்தியர் அவசியம் நியமிக்கப்படவேண்டுமென்பது அங்குச் சட்டமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இச்சட்டத்தை மீறி நடப்பவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள். ஆகவே, பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படுமுன் கலாசாலை வைத்தியரால் பரீக்ஷிக்கப்படுகின்றனர். பிள்ளைகளுக்கு வியாதிகள் இருக்குமாயின், அவை அவர்களின்பெற்றோர்களுக்கு அறிவிக்கப்படுகின்றன. இம்முறையினால் அங்குள்ள பள்ளிக்கூடங்களில் கல்வி பயிலும் பிள்ளைகள் நல்ல தேகபுஷ்டியுள்ளவர்களாகவிளங்குகிறார்கள். இவ்விஷயமானது நமது கவர்ன்மெண்டாருக்குப் பலமுறைகள் எடுத்துரைக்கப்பட்டும், அது கவனிக்கப்படாமலிருந்தது. ஆனால், இப்போது அவர்கள் பள்ளிக்கூடத்து மாணவர்களுக்கு வைத்திய பரிசோதனை அவசியமென்று ஓர் உத்தரவை வெளியிட்டிருக்கிறார்கள். அதை மற்றொரு பத்தியில் பதிப்பித்திருக்கிறோம். இந்த உத்தரவு அமுலுக்கு வருமாயின், பிள்ளைகளின் வியாதிகளும், பள்ளிக்கூடங்களின் சுகாதாரக் கேடுகளும் ஒழியுமென்பதில் சந்தேகமில்லை.

# நாகரிக நிலை.

[ஓர் தமிழ் மாணவர் எழுதியது]

பல்லாண்டுகளுக்கு முன்னர், புண்ணிய மாதெனப் புகழெடுத்து, சகலச் சிறப்புக்களும் குறைவற நிறைந்த இவ்விந்திய நாட்டின்கண் வாழ்ந்த நம்மூதாதையர் அனுசரித்த பற்பல பழக்கவழக்கங்களையும், தற்காலத்திய நவீன நாகரிகர் எனப் பேர்பெற்ற இச்சில்வாழ்நாட் பல்பிணிச் சேதனரின் நடையுடை பாவனைகளையும் ஈண்டுச் சிறிது எடுத்துக் காட்டுவோம் :—

பண்டைக்காலத்து வேதியர் தன் தொழில் மறவாது, வெய்யோன் உதயமாகுமுன் எழுந்து தம் காலைக்கடன்களைச் செவ்வனே முடித்து, புனலிடை மூழ்கி, அரிய பெரிய நம் மூதாட்டி "நீரில்லா நெற்றி பாழ்" என்பதனால், திருமண், திருநீற்றுக் காப்புக்களை விதிப்படி புனைந்து, ஜபதபங்களை நேர்பெற முடிப்பர். பின்பு, அன்னோர் மனவாட்டமின்றி இயற்றுந் தன் தவத்திற்குரிய குற்றேவல்களை புரியுமாறு தம்மனைவியரிடம் கட்டளையிட்டுச் சதாகாலமும்,

"கல்லினுட் சிறுதேரைக்கும் கருப்பை யண்டத் [துயிர்க்கும்
புல்லுண வளித்துக் காக்கும் புனந்துழாய்க் கண்ணி [யண்ணல்."

மாட்டு ஈடுபட்டிருப்பர்.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம்."

என்பதற்கிசைய, இவ்வருமறையந்தணர் முகாரவிந்தத்தைக் கண்ட எவர் தாம் அன்னோர் மாசிலாக் குணங்களைப் போற்றார்? அத்தகையோர் வறுமையைச் செல்வமெனக்கொள்ளல் வியப்பாமோ? குசேலர், வசிட்டர் முதலானோர் இத்தகையோர் என்பது வெள்ளிடைமலை. இன்னோர் நான்கு வேதங்களையும் தம் இனிய நாவால் எக்காலும் ஓதியவராய் வாழ்ந்திருந்தனர். மன்னர்கள் இவ்வேதியரின் அரிய குணங்களைக்கண்டு, அவர்கள் பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து, ஆசிர்வதிக்கப்பெற்று, அவர்களுக்குத் தக்க சம்மானம் கொடுத்தனர் என்றால், பிரஜைகள் அவர்களிடம் நடந்துகொண்டதை நாம் ஊகித்தறியலாம். இவ்விஷயத்தை நைடதத்தில், அதிவீரராம பாண்டியர், அரிய வேதத்தின் பொருள்களைக் கற்றுணர்ந்த அந்தணரின் பொருளாசை அழியும்படி அன்பினாலே கொடுக்கப்பட்ட பெரிய பொருள்களின் குவியல்களோடு விதிப்படி (தாரை) வார்க்கப்படும் நீரானது பெருக்கெடுத்து விரைந்தோடி, இரேகைகளையுடைய சங்குகளால் கூவித்தரப்பட்ட முத்துக்களானவை, இளஞ்சந்திரிகை வீசுகின்ற அழகிய நீண்ட கழனிகள்தோறும் செந்நெற்பயிரை வளர்க்கும்" என்னும் கருத்து அழகுபெற அமையும்படி,

'அருமறைக் கிழவருள்ளத் தவாக்கெட வன்பின்நல் [கும்
பெருநிதிக் குப்பையோடு பெய்புனல் பெருகியோடி
வரிவளை யலறி ஈன்ற மணியிள நிலவுகாலும்
திருவளர் கழனிதோறும் செந்நெலை வளர்க்குமா [தோ."

என்று பாடியுள்ளார். மற்றும், "வேதமோதிய வேதியர்க்கோர்மழை" என்பதனால் அந்தணர் வேதமோதுதல் பிரஜைகளின் க்ஷேமத்தைக்கருதியே என்பது கரதலாமலகம்.

பண்டைக்காலத்து மன்னரோ, இக்குவையத்தையாளும் பெரும்பதவியிலிருந்தும், பிராம்மணர்களைப் பணிந்து, அவர்களை "முன்வருதல் சேமிக்கும்" அமைச்சராக்கினர். ஓர் வேதியன் அரசவைக்களத்திற் செல்லினும், அவர்கள் உடனே தம் இருக்கைவிட்டெழுந்து ஆசனமளித்து, யோகக்ஷேமங்களை வினவித் தக்க சம்மானமளித்து அவர்களால் ஆசீர்வதிக்கப்பெற்றனர்.

"தேவர் நிலைகடவார்; மேலோர் திறம்பிழையார்;
நாவி னிரண்டுரையார்; நன்கல் லவைபுரியார்;
காவன் முறைதிறம்பார்; காமச்செயல்பெருக்கார்;
பூவ லயங்காலன் புரியும் புரவலரே."

என்னும் பாவால் பண்டை அரசரின் இயல்பு குறிக்கப்படுகின்றது. அவர் மன்னுயிரைத் தம்முயிராகப் பாவித்தனர் என்பதற்குப் பல திருஷ்டாந்தங்களிருப்பினும், ஈண்டு ஒன்றைக் குறிப்பிடுவோம் :—

ஒட்டக்கூத்தன், குடந்தை வீரசிங்காதன மடசங்கமர் ஒருவரைக் கசையால் அடித்துக் கொன்றான். உடனே மற்றைச்சங்கமர் ஒருங்கு சேர்ந்து, ஒட்டக்கூத்தனைத் தண்டிக்குமாறு புறப்பட்டனர். இதையறிந்த கூத்தன் உடனே, மனுச்சோழன் வமிசத்தோன்றலின் அரண்மனை புக்கு நிகழ்ந்தனவுரைத்தான். அவன் கவியை ஓரிடத்தில் ஒளித்துச் சங்கமர்களைப் பன்முறைபணிந்து, அக்கொடிய குற்றத்தைப் பொறுக்குமாறு மன்றாடினன். என் சொல்லியும் செவிகொடாது வாளாவிருந்த அவர்கள் ஒரேபிடிவாதமாய்ப் பழிவாங்குதலையே கூறிநின்றனர்.

அரசன் சற்று ஆலோசித்து, பிறகு உட்சென்று, தன் அருமைமைந்தனை இரகசியமாக அழைத்து, நடந்தனவுரைத்து, "இக்கஷ்டம் உன்னாலேதான் தீரவேண்டும்" என,

"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான்கொல் என்னும் சொல்."

என்னும் பொன்னேபோற் போற்றும் பொருளுரை பழுதாகாவண்ணம் அச்சிறுவன் "மனுக்குலத்துத் தோன்றலின் மகனை யான் மறுத்தல் என்றும் இல்லை. என் பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பையும் இன்னுயிரும் தங்களதீனம். எது வேண்டினும் அஃதாற்றக் கடமைப்பட்டுள்ளேன்; இதைத்தவிர வேறு இன்பம் எனக்கு ஒன்றுமில்லை" என்றனன்.

உடனே அரசன் புதியதோர் முறுவல் செய்து, மைந்தன் குணத்தை மிகுதியும் மெச்சி, அவனை ஓர் மூடுபல்லக்கில் ஏற்றித் திரைகட்டி அவையில் கொணர்ந்து, சங்கமர்களை விளித்து, "ஐயன்மீர்; கூத்தனை இதனுள் ஏற்றியிருக்கிறேன். இவனை ஓர் மறைவிடத்தில் வைத்துக்கொல்லுங்கள்" என்றான். இது

"அகளங்கச்சோழ னொருபிள்ளையீந்தான்."

என்னும் தனிப்பாடலில் குறிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதுவன்றோ அரசரியல்பு? முன்னாட்களில் புலவரிடம் அரசர் காட்டிய கௌரவம் மெச்சத்தகுந்ததே!

வைசியர் வாணிகஞ்செய்வதில் பிறழாமலிருந்தனர். ஜனங்களின் முன்னோக்கை எதிர்பார்த்தவராய்ச் சொற்ப ஊதியம்வைத்தே தானியங்களை விற்றனர். பஞ்சக்காலத்தில் ஏழைச்சனசமூகத்தின்மேல் இரக்கம்காட்டித் தங்களாலியன்றமட்டும் தானியங்களைச் சொற்பவிலைக்கே விற்றனர். அரசனையும் அந்தணனையும் தெய்வம்போலக் கருதினர்.

நான்காம் வருணத்தவரோ, எப்போதும் ஏர்தூண்டுதலொன்றையே தம் தொழிலாகக் கருதி மேலோரிடத்துப் பயப்பட்டிருந்தனர். சிலர் இதைத் தவறாக எண்ணிவிடுகின்றனர். ஏர்தூண்டுதலின் மிக்கதோர் தொழில் ஏதேனுமுளதோ? கம்பர் ஏரெழுபதில் உழவுச் சிறப்பைக் கீழ்வருமாறு கூறுகின்றனர் :—

"நீர்விளாக் கொளவளர்ந்த நிலமெல்லாம் தம் [முடைய
சீர்விழாக் கொளவிளக்குந் திருவிழாப் பெருக்காளர்
ஏர்விழாக் கொளினன்றி யெறுழ்க்கரி, தேர், மாப் [படையாற்
போர்விழாக் கொளமாட்டார் போர்வேந்த ரானு [ரே."

இத்தகைய தொழிலாளிகளாகிய சூத்திரரைக் குறித்து மற்றும்,

"வேதியர்தம் முயற்குலமும், விறல்வேந்தர் பெருங் [குலமும்,
நீதிவளம் படைத்துடைய நிதிவணிகர் தங்குலமும்
ஜாதிவளம் படைத்துடைய தாயனைய காராளர்
கோதில்குலந் தனக்குநிகர் உண்டாகிற் கூறீரே."

என்றார். யாம் முதலில் கூறியுள்ள மாசற்ற குணங்களே உருவெடுத்தாற்போன்ற அருமறையந்தணரை இந்நான்காம் வருணத்தவர்

அடிபணிந்து சேவித்தல் நேர்மையன்றோ ? ஊன்றிப் பார்க்குமிடத்து இதில் இகழ்ச்சி எள்ளளவேனும் இல்லையென்பது புலனாம் ; பெருமையேயாகும்.

ஆதலால், பண்டை நாட்களில் நம்மிந்திய நாட்டில் இருந்த நம்முன்னோர் நிலைமையை,

"கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்விமுற்ற
வல்லாருமில்லை ; அவைவல்லா ரல்லாரு மில்லை ;
எல்லாரு மெல்லாப்பெருஞ்செல்வமு மெய்தலாலே,
இல்லாருமில்லை ; உடையார்களு மில்லை மாதோ !"

என்னும் கம்பர்வாக்கால் அறியலாகும். நம் மூதாதையர் கல்வி கேள்விகளில் வல்லுநராயும் வருணாச்ரம தர்மங்களைச் சிரமேற்கொண்டு ஒழுகுபவராயும் இருக்க, இக்காலத்திய நவீன நாகரிகரின் நிலைமையை இனி எழுதுவோம்.

---

## New Sonnets in Tamil.

BY MR. V. SUBBA AIYER.

## தமிழ் நவீனப் பாசுரங்கள்.

### 20. தாய்களுக்கோர் விண்ணப்பம்.

நேரிசை யாசிரியப்பா.

தாய்களே ! உங்களுக் கோர்சிறி தாய
வாய்மொழி சொல்வதை மன்னித் தருளுமின் ;
சேய்களைச் செல்வத் துடனே வளர்த்தல்
அன்னையர்க் குரியநற் குணமே யாயினும்
அன்னவர் தங்களி னறிவிலா நிலைமையில்
அன்ன மளித்தலே போதா துணர்மின் ;
அவர்களை நல்வழி யடையச் செய்தல்,
தவறுகள் செய்வதைத் தடுத்துக் காத்தல்,
தேகம் பேணுதல், தெய்வந் தொழுதல்
ஆகிய வினையெலா மறிந்திட நீரே
இத்தரை தனிலவர்க் கிணையறு துணையாம்
வித்தையைக் கொடுத்து விளக்குமி னெழிலே ;
இவ்விதஞ் செய்திடி னிந்நிலஞ்
செவ்வனே யாகுதல் திண்ணந் திண்ணமே.

---

### 21. சகோதரர்.

நிலைமண்டில வாசிரியப்பா.

தனியே காட்டிடை நின்றிடு மோர்மரம்
தோப்பெனப் பெயர்பெறு தென்பதை யறிவோம் ;
அத்தோப் பிலையெனி லவ்விடம் நீழலும்
ஈரமுங் குறையுமென் றுரைத்திடல் வேண்டுமோ ?
அவ்வித மொருவன் தன்னந் தனியே
ஈட்டிடும் பொருளுங் கீர்த்தியுஞ் செவ்வனே
செழிப்பது துர்லப மாகையாற் சோதரர்
ஒன்றாய்ச் சேர்ந்திவ் வுலகிடை யுறைதல்
நன்றென வுணரும் நயமாய் ; மேலும்
சோலையி லோர்மரங் காற்றினால் வீழ்வதைப்
பக்க மிருக்கும் பலமரந் தடுக்கும்,
அதுபோ லொருவன் வருந்தும் வேளையில்
அன்னவன் சோதர ரவனுட னிருப்பின்
பின்ன மடையா திருப்பது மெளிதே.

---

### 22. பிள்ளைகளுக்கோர் கட்டுரை.

நேரிசை யாசிரியப்பா.

பிள்ளைகாள் ! வள்ளுவ ரெனுமோர் பெரியவர்
உள்ளங் கனிந்தே யுங்களுக் கோர்மொழி
சொல்லிய துளதஃ தேதோ வென்னில்,
நல்லவ ரென்றே யுலகம் புகழ்ந்திட,
நீவிர் கீர்த்தியை நிலையா யடைந்து

நுந்தமைப் பெற்ற தந்தையர் புகழைப்
பரவச் செய்து பாருளோ ரெல்லாம்
அன்னவ ரோம்பிய தவத்தைப் பேசுதல்;
அவ்வித மாய நிலையை யடையக்
கல்வியைப் போன்ற துணையிலை கருது
[மின்;
அத்துட னறநெறி வழுவா திருமின்;
பெற்றவர் தம்மைப் பேணுமி னினிதாய்;
நற்றறி வுடையோர் சேர்க்கையை
இற்றே விடுமி னிசையுடன் வாழவே.

---

## 23. குயில்.

### நேரிசை யாசிரியப்பா.

நம்தே சத்தில் நயமாய் வசந்த
காலந் தன்னிலோர் காலை வேளையில்
இளந்தளிர் செறிந்த மரங்கள் நிறைந்த
தோப்பிடைச் செல்கையிற் காதுக்கினி
[மையாய்
ஓர்புள் ளொழுங்காய்ப் பாடுவ தறிவீர்;
அச்சிறு பறவைச் சுத்தக் கறுப்பாய்
அல்லதேல் வெண்மை நிறம்வாய்ப் புள்ளி
[கள்
கலந்தோ விளங்கிடு மிறகுக ளுடையது;
அதனின் குரலும தகத்திற் புகலுஞ்
சகந்தனை மறந்துநுஞ் சங்கட மொழிப்
[பீர்;
அவ்வித மாய வமிருத கானஞ்
செவ்விதாய்ச் செய்திட வதனைப் படைத்
[துத்
தம்மருள் காட்டிய தயாபரன்
உம்மையுங் காத்திட வுறுதியாய்ப் பணி
[மினே.

---

## 24. கிளி.

### நேரிசை யாசிரியப்பா.

"சொன்னதைச் சொல்லுமாங் கிள்ளை"
[யென்றே
இந்நிலத் துள்ளபே ரறிவுள மக்கள்
தாமா யொருபொரு ளுணரா தாரைக்
கேவல மாகக் குறித்துரை செய்வர்,
ஆயினுங் கன்னியின் மொழியைப் பேசி
[டிற்
'பசுங்கிளி போன்றநற் பாவை' யென்பர்;
அவ்வித மெழில்வாய் கிள்ளையி லநேக
சாதி பேதமுஞ் சாற்றிடி லுண்டு;
பச்சை நிறமா யிருக்கும் பக்ஷியை
நித்தமுங் காணலாம், நேர்மை வாய்ந்த
பஞ்ச வர்ணமுந் தூய வெண்மையும்
சிவப்பு மின்னும் பலநிற முள்ள
கிளிகளி னழகைக் காண்டொறும்
அளிப்பவ னருளை யகத்திற் பதிமினே.

---

## 25. மழை.

### நிலைமண்டில வாசிரியப்பா.

கடல்குளம் முதலிய நீர்நிலை களின்மேல்
சூரிய வெப்பஞ் சுருக்கெனப் பட்டதும்
அவைகளி லுள்ள தண்ணீ ராவியாய்
ஆகா யத்தினை யடைந்து நிற்கும்,
அதன்மேற் சில்லெனக் காற்று மடித்தி
[டில்
அன்னது திரண்டுநன் மேகமாய் விளங்கி
அங்கு மிங்குமக் காற்றுடன் சென்று
தங்க முடியாக் கனமும் வாய்ந்திடில்
மழையெனப் பொய்திடும் மண்ணுளோ
[ருய்ந்திட;
அம்மழை யிலையே லருந்திட நீரும்
உண்ண உண்டியு முடுக்கத் துணியும்
கிடைப்பது துர்லப மென்பது திண்ணம்;
ஆகையால் மழையை யடிக்கடி பெற்றிட
அகில நாதனி னடிபணி வீரே.

The right of publishing all the sonnets that have appeared in book form is reserved by the author. Editors of other journals may publish them provided they send 2 copies of the issue in which they appear to V. Subba Aiyar, Seetharama Mudali Street, Vellore.

# நம்மையாளும் ஜியார்ஜரசர்

## வெற்றிவாழ்த்துப் பஞ்சரத்நம்.

[ஸ்ரீமான் வி. வி. குமாரசாமி பிள்ளை எழுதியது.]

மன்னர்தம் வெற்றிவாழ்த்துவந் துரைக்க
முன்னர்வந் துதவும் முன்னவன் அடியே.

பாலோங்கு மேனியனைப் பார்புகழும் ஜார்ஜரசை
மாலோங்கு சேரார் மலைகடலை—நூலோங்கும்
மாதவனைப் போற்குடித்த வாகையனைமண்புரந்த
மாதவனைப் போற்பிடித்தம் வாழ்ந்து.

(1) மணமுறிய சடையான்மகன் வடிவேல்
[கொடு முனமே
வழிமீறிய அவுணப்படை மடியப்
[பொரு கதையும்
திணமுறிய வேல்தாங்கிய நிலனுள்தச
[ரதன்சேய்
நெறிகோடிய அரக்கன்படை நீறுக்
[கிய செயலும்
குணமாறிய துரியோதனன் குலவேரொடு
[மடியக்
குறித்தேதிரி புயல்போல்வரு குரி
[சில்புரி பரிசும்
வணமுறிய பெருநூல்களி லறிந்தேதமிது
[நேரே
மகிழ்தந்தது கண்டேபொரு வளநல்
[வினை வரவே.

(2) நயமுறிய நமக்கேயிது நாளுந்நிலை பெறு
[மே
நடுமாறிய ஜர்மானியர் நாலாம்படை
[யிருளும்
சயமேறிய ஜார்ஜாமனர் தாவாவொளிர்
[நவிரால்
தரைவாடிய முறைநீடிய தனியே
[வளர் செங்கோல்
வயமேறிய மதியேய்குடை வளர்வாகுற
[விரிந்த
வண்டாமரை மலர்தாங்கிய திருமா
[மகள் மகிழ்ந்தாள்
பயமாறிய குடிகள்வெகு பயனுனவை
[யுற்ற
பார்மீதினி வாழ்வேமிகும் பாரீரிது
[மெய்யே.

(3) குலமாமகள் கொஞ்சுங்கிளி கொடியே
[ரிடை மேரி
குணமாமலை குருமாமணி கொள்ளுங்
[களி கண்டே
தலமாமகள் தானேமகிழ் தரவேபுரி நட
[னத்
தாளாயின ளாமேபுவி தடையின்றியு
[ரைக்கும்
மலர்மாமகள் அயனார்மனை வெண்டாமரை
[மகளும்
வாளேந்திய வள்ளல்புய வதனத்
[துறை பேறே
நலமாவசு என்னேபுரி தந்தாசறம் நன்றே
ஞாலந்தனி லறவேகலி நலிந்தேநடந்
[ததுவே.

(4) போரோங்கிய சேனைக்கொரு பொருவில்
[பல படைக்கே
பூவில்வரு மயனும்புகழ் பொற்பே
[யமை கொலைசேர்
கூரோங்கிய பரிக்கேகதி வகையோங்கிய
[சமரே
குறியாவினை யாரும்பய மின்றே
[முனை கூடி
வாரோங்கிய கழலன்பொடுவனைந்தேசெய
[லுற்றார்
மணிவண்டின மூசுந்தொடை யணி
[வான்புனை நாமம்
பாரோங்கிய தருவார்ப்பசுங் கிளியும்பயின்
[றனவே
பலகூறியெ னுலகாமுட லுலவும்
[முயி ரிவனே.

(5) தேனூறிய தார்சூடிய ஜியார்ஜாமா சினி
[தே

செயமாமகளோடேநெடுநாளேநனி
[வாழ்க
வானேறிய புகழேநெறி குடையேகழல்
[வாளே
மணிமாமுடி கொடியேமுரசணி
[கோலொடு வாழ்க
கானூறிய குழலேந்திய கருணைக்கடல்
[மேரி
காதல்புரி மக்கள்படை சூடிகண்
[ணில மென்றும்
மானேறிய கையானயன் அரியேயிவ ரரு
[ளால்
வாழ்வோங்கிட வாழ்வோங்கிட
[வாழ்வோங்கிட நன்றே.

பூர்த்தியின்பம்.

---

## The Lost Will.

By Mr. M. S. Krishnasamy Iyer.

## காணமற்போன மரணசாஸனம்.

### 11-ம் அத்தியாயம்.

சங்கரய்யருடைய இளையமனைவி சேஷியைப் பற்றி இனி நாம் கவனிப்போம். சேஷி தனது கணவன் இறந்து நாலைந்து மாதங்களானதும், அவள் தனது துக்கத்தை மறக்கலானாள். "ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் வருவரோ மானிலத்தீர்" என்பது போன்ற பல நீதிவாக்கியங்களை அவள் எடுத்துச்சொல்லி: "பிறந்தவர் இறப்பது நிச்சயம், இறந்தவர் பிறப்பது நிச்சயம். சாவைத்தடுக்க ஈசுரனாலும் முடியாது. பிறப்பொழிந்தால் இறப்பும் ஒழியும். அதுவரையில் நாம் காலச்சக்கிரத்தில் அகப்பட்டுக் கஷ்டப்படவேண்டியது தான். ஆகையால், ஒவ்வொருவரும் ஸம்ஸாரபந்தங்களை விட்டொழிப்பதற்காக ஆத்மவிசாரணை செய்துவரவேண்டும். பகவானிடத்தில் மனத்தைச்செலுத்தி அவரை ஸதாஸர்வகாலம் ஸ்துதி செய்தவண்ணமாயிருக்கவேண்டும்—" என்றிவ்வாறு வேதாந்த உபதேசம் செய்யத் தலைப்பட்டாள். அவ்வூரிலுள்ள அநேக ஸ்திரீகளும் சில புருஷர்களும் அவளுடைய வேதாந்தத்தைக்கண்டு ஸந்தோஷமடைந்தார்கள். சேஷி எப்போதும் நெற்றிநிறைய விபூதியைப் பூசிக்கொண்டு கையில் சிறுமணிகள் உள்ள ருத்திராக்ஷமாலையை வைத்துக்கொண்டு உருட்டிக்கொண்டிருப்பாள். அவளுக்குக் கொஞ்சம் வாசிக்கத் தெரியும்.

ஊரிலுள்ள ஒவ்வொரு வீட்டிலிருந்தும் சேஷி புஸ்தகங்களைத் தருவித்து வாசித்துவந்தாள். இதனால் அவளை அநேகர் ஒரு பெரிய யோகினி யென்றே மதித்துவந்தார்கள்.

வரவர அவளுக்கு வேதாந்தம் முற்றலாயிற்று. இந்த தேகம் என்னத்திற்கு; இதை ஸம்ரக்ஷிப்பானேன்; இது எப்படிப் போனாலென்ன என்று அலக்ஷியமாய் இருந்துவிடுவோமென்று சொல்லி ஆகாரத்தைக் குறைக்கலானாள். இதனால் ஜனங்களுக்கு அவள்பேரில் மிகுந்த மரியாதை உண்டாயிற்று.

சேஷிக்கு ஸொத்து அதிகமானதனாலும், அவள் சிறுவயதினளானதனாலும், குடும்பத்தைக் கவனித்துவர வேறு மனுஷ்யாள் இல்லாததனாலும் அவளுடைய சகோதரர் சாம்பசிவ அய்யர் தமது மனைவி சகிதமாய் வந்து, சேஷி வீட்டில் தங்கியிருந்து ஸொத்தைப் பராமரித்துவந்தார். சேஷி எல்லாப்பொருப்புகளையும் தனது தமையனிடம் விட்டுவிட்டு ருத்திராக்ஷத்தை உருட்டுவதே பெரிய வேலையாகக் கொண்டுவிட்டாள்.

சாம்பசிவ ஐயர் மனைவி ஸீதை மிகவும் ஸாது. அவளுக்கு இகலோக விஷயங்கள் தெரியுமேயல்லாமல், பரலோக விஷயங்கள் ஒன்றும் தெரியாது. மோக்ஷம் என்றால் என்ன? ஸ்வர்க்கம் என்றால் என்ன? என்று

கேட்டால், அது தெரிந்தென்ன ஆகவேண்டுமென்பாள். உண்பதும் உறங்குவதுமே வேதாந்தமென்பாள். சேஷியைக்கண்டால் அவளுக்குப் பிடிக்கிறதில்லை. சேஷி வேதாந்தம் பேசிக்கொண்டு ரேழித்திண்ணையிலும் கூடத்திலும் உட்கார்ந்திருக்க, தான் சமையல் அறையில் உட்கார்ந்துகொண்டு சமையல் செய்து வந்தவர்களுக்கெல்லாம் சோறுபோடுவது அவளுக்கு இஷ்டமில்லை. ஏனெனில், சேஷி ஒருகாரியமும் செய்யாவிட்டாலும், தன்னுடன் பேசவந்தவர்களில் சிலரைத் தினம் சாப்பாட்டுக்கு அழைக்காமலிருப்பதில்லை. நித்யம் நாலைந்து ஸ்த்ரீகளும் குழந்தைகளும் சாப்பிட உட்கார்ந்துவிடுவார்கள். ஸீதை இரண்டொருமாஸம் பொருத்துப்பார்த்தாள். அவளால் ஒன்றும் ஸகிக்கமுடியவில்லை. எத்தனைபேருக்குச் சமைத்தாலும் சில ஸமயங்களில் அதற்கதிகமாக ஸ்த்ரீகள் சாப்பாட்டுக்கு வந்துவிடுவது வழக்கம். தனக்கும் சாதம் போதாமல் போகும் ஏனெனில், ஸீதையம்மாள் சேஷிமேலிருந்த வெறுப்பால் அவளுடன் உட்கார்ந்து சாப்பிடாமல், அவளும் அவளுடைய தோழிகளும் கலைந்தபிறகே சாப்படுவது வழக்கம். சில ஸமயங்களில் கொஞ்சங்கூட அன்னம் இல்லாமல்போய், மறுபடியும் சமைக்க நேரிட்டதுமுண்டு. இரண்டொரு ஸமயங்களில் தன் புருஷனிடம் குறைகூறியும், சாம்பசிவய்யர் அதை காதில் போட்டுக்கொள்ளவில்லை. சிலஸமயங்களில் மிச்சமிருந்த சொற்ப அன்னத்தை உண்டு ஸீதை திருப்தியடைந்ததுமுண்டு; சிலநாள் சிரமத்தால் மறுபடி சமைக்க மனமில்லாமல் பொரிமாவை மோரில்கரைத்துக் குடித்துவிட்டு சும்மாயிருந்ததும் உண்டு.

ஒருநாள் சேஷியிடம் அதிகம்பேர்கள் பேசவாததைக்கண்டு, ஸீதை கொஞ்சமாய் சாதம் சமைத்திருந்தாள். நித்தியம் உண்டு ருசிகண்ட ஸ்த்ரீகளும் குழந்தைகளும் சாப்பாட்டு வேளைக்கு அங்குவந்துவிட்டார்கள். சமைத்த சாதம் அவர்களுக்கே போதும்போதாமலிருந்தது. அன்று கறிகூட்டுகூட மிஞ்சவில்லை. குழம்பு ஒருசாண்டிதான் மிஞ்சிற்று. சேஷியும் மற்றவர்களும் மறுபடியும் வம்புக்குப் போனதும், ஸீதை தனது கஷ்டத்தை நினைத்து துக்கப்பட்டு, சமையலறையில் ஒரு ஓரமாகப் படுத்துக்கொண்டாள். அப்போது சாம்பசிவய்யர் ஏதோ காரியமாக சமையலறைக்குவந்து அவள் படுத்திருப்பதைப்பார்த்து,

“ஏன், சாப்பிடவில்லையோ?” என்று கேட்டார்.

ஸீதை தன் புருஷனைத் துன்பப்படுத்த இஷ்டப்படுவதில்லை. தன் கஷ்டகாலம், பிறருக்கெல்லாம் சமையல் செய்து போடவேண்டுமென்று தலையில் எழுதியிருக்க, பிறரை நோவானேன் என்று அதிகம் குறைகூறுவதில்லை. ஆகையால் அவள், “சிரமமாயிருந்தது; அதனால் படுத்துக்கொண்டேன்; சாப்பிட்டால் போகிறது” என்றாள்.

சாம்பசிவய்யர் பிறர் விஷயத்தில் எப்படியிருந்தாலும், தமது மனைவியின்மேல் அவருக்கு அதிக அன்புண்டு. பூலோகத்தில் மற்ற எதற்கும் கட்டுப்படாதவர் அவளுடைய வார்த்தைக்குமாத்திரம் கட்டுப்பட்டு நடப்பார். ஸீதை மிகுந்த குணவதியாகையால், அவளுக்கு யாதொரு தொந்தரவும் அவர் வைப்பதில்லை.

சிரமத்தால் படுத்துக்கொண்டிருப்பதாகத் தெரிந்ததும், சாம்பசிவய்யர் தாமே சாதம் பரிமாறுவதாகச் சொல்லி ஒரு இலையை எடுத்துப் போட்டு, ஜலந்தெளித்து, அதில் அவளை உட்காரச் சொல்லிவிட்டு, கறியெடுக்கப்போனார். கறியையும் காணோம் கூட்டையும் காணோம். மற்ற பாத்திரங்களையும் அவர் பார்த்தார்; எல்லாம் துடைத்திருந்தது.

“ஏன்? எல்லாம் ஆகிவிட்டதா?”

“ஆம், ஆகிவிட்டது.”

“நீ சாப்பிட வேண்டாமோ?”

“என்னமோ, சாப்பிடாவிட்டால் போகிறது. நெல்லுமாவையாவது அவலையாவது எடுத்துக் கொண்டால் போகிறது.”

"என்? கொஞ்சம் அதிகமாகச் சமையல் செய்யக்கூடாதோ? நித்தியம் இப்படித்தானே?"

"எத்தனைபேர் இலையில் உட்காருவார்களென்று யாருக்குத் தெரியும். நான்தான் பரிசாரகியாய்ப் போனேன். என்னிடத்தில் யார் இதைச் சொல்லுகிறார்கள். அவாள் வந்து சாப்பிட்டுப் போகவேண்டியது. இங்கு நான் எப்படிப் போனாலென்ன."

"நீதான் இன்னும் கொஞ்சம் அதிகமாக வடிக்கக்கூடாதோ? உனக்காகத் தெரிய வேண்டாமோ இது?

"அது பிசகுதான். அதற்கபராதம் இதோ அனுபவிக்கிறேனே. அது போதாதா? நான்தான் பரிசாரகியாய்ப் போய்விட்டேன். கண்ட பேர்களுக்கெல்லாம் சமையல் செய்து போட வேண்டுமென்று என் தலையில் எழுதியிருக்கிறது. சரி, அதைப்பற்றி உங்களுக்கென்ன கவலை."

"இல்லை. யாராத்திலாவது கொஞ்சம் சாதம் வாங்கிக்கொண்டு வரட்டுமா?"

"சரி, மானம்போகவேண்டியதுதான் பாக்கி. இப்போதே என்னைப் பரிசாரகி என்று பலர் ஏளனஞ் செய்யப்போகிறார்கள். நீங்களும் சோற்றுப்பிச்சை கேட்கப் போங்கள் எனக்காக."

"அப்புறம், நீ சாப்பிடவேண்டுமே; என்ன செய்வாய்?"

"என்னமாவது செய்கிறேன். அவல் இருக்கிறது—"

இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கையில் சேஷி தீர்த்தம்குடிக்க சமையலறைக்கு வந்தாள். "என்ன விஷயம்" என்று கேட்டாள். சாம்பசிவய்யர் விஷயத்தைத் தெரிவித்தார்.

அதற்கு சேஷி கொஞ்சமும் வருத்தங்காட்டாமல், மறுபடியும் சமைத்தால் போகிறதென்றும், அதிகமாகச் சமைக்கிறதற்கென்னவென்றும், யார் வீட்டிலாவது கொஞ்சம் சாதம் வாங்கிக்கொண்டு வரலாமென்றும் சொன்னாள்.

சீதை புருஷனிடம் தனிமையாக இருக்கும் போதுதான் தாராளமாய்ப் பேசுவாளேயொழிய, பிறர் முன்னிலையில் ஒன்றும் பேசுவதில்லை. ஆனால், சேஷி சொன்ன வார்த்தைகளால் அவளுக்குக் கோபம் தன்னையுமறியாமல் வந்துவிட்டது; எவ்வளவு அடக்கியும் அடங்கவில்லை.

"உன் வீட்டில் பரிசாரகியாய் வந்து கண்டபேரிடத்தில் பேச்சுக்கேட்பதும் போதாமல், சோற்றுப் பிச்சையெடுக்கச் சொல்லுகிறாயா? உன் வீட்டில் சமையல்காரியாய் வந்திருக்கிறேனே அந்த அதிருஷ்டத்தைச் சொல்ல வேண்டும். நீ என்ன செய்வாய். பணமிதப்பு. தோன்றினதெல்லாம் பேசுவாய்" என்று சொல்லிவிட்டு வேறு ஒரு அறைக்குள் போய்ப் படுத்துக்கொண்டாள்.

சேஷியம்மாள் சீதையைச் சற்று தூஷித்து, சமையலுக்கு ஆள் போடுவதாகச் சொல்லிவிட்டு, வேதாந்த விசாரணை செய்யப் போய்விட்டாள். சாம்பசிவய்யர் தன் மனைவியைத் தேடிப்போய் சமாதானம்செய்து, போரில் நனைத்த அவலும் பொரிமாவும் சாப்பிடும் வரையில் கூட இருந்து, அவள் பிடிவாதத்துக்கு இணங்கி தனிக்குடித்தனத்துக்குச் சம்மதப்பட்டார்.

அன்றிரவு சமையல்காரி வந்துவிட்டாள். அலமேலு அம்மாள் சேஷியின் பரிதாபநிலைமைக்கு வருத்தப்பட்டு, தனக்கும் தன் புருஷனுக்கும் மாஸம் எழு ரூபாயும், வேறு யாராவது பந்துக்கள் வந்துவிட்டால் அவர்களுக்குச் சாப்பாடும், இவை இருந்தால் போதுமென்று சொல்லி ஒப்புக்கொண்டாள். பற்று பாத்திரம் தேய்க்க ஒரு வேலைக்காரி நியமிக்கப்பட்டாள். அலமேலு தன் புருஷனுக்கு ஏதாவது கணக்கு எழுதக்கொடுத்தால் அதற்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டியதில்லையென்றும், தன் புருஷன் வேலைபார்த்து வருவார் என்றும் சொன்னாள்.

சேஷி தனது தமையன் என்ன சம்பளம் போட்டுக்கொடுக்கிறானோ அதைக் கொடுப்பதாகச் சொன்னாள். சாம்பசிவய்யர் 10 ரூபாய் கொடுக்க ஸம்மதித்தார். தம்பதிகளிருவருக்கும் சேஷி வீட்டில் சாப்பாடும் சம்பளமும் கிடைத்தது.

(தொடரும்,)

எம். எஸ் கிருஷ்ணசாமி ஐயர்.

---

## The Diamond Ring.

By Mr. S. Narasimhachariar, B.A; B.L.
*High Court Vakil, Madras.*

## வைர மோதிரம்.

### அத்தியாயம்—2.

### காந்திமதி கண்ட கனவு.

பனைப்பாளையத்துக்கு எழுபதுமைல் தூரத்தில் பூங்குப்பம் என்ற ஊரில், மற்றொரு ஜமீன்தார் இருந்தார். அவர் பெயர் பாண்டுரங்கபூபதி. இவர் சொக்கநாதருக்கு நெருங்கின பந்து. இவருக்கு ஏகபுத்திரியாகிய ஸௌந்தரவல்லி என்னும் கன்னிகை, அழகிலும் புத்தியிலும், அடக்கத்திலும், தனக்குச்சமானமானவர் இல்லையென்று அனைவரும் கூறுமாறு, சிறந்து விளங்கினாள். பாண்டுரங்கரும் சொக்கநாதரும் அடிக்கடி சந்திப்பது வழக்கம். இப்படி ஒருஸமயம் ஸந்தித்தபோது, அப்போது பத்துவயதுள்ளவனாயிருந்த அம்பலவாணனுக்கும், சிறுபெண்ணான ஸௌந்தரவல்லிக்கும் விளையாட்டுஸ்நேகம் உண்டாகி, நாளடைவிலே அந்த அன்பு மேன்மேலும் விருத்தியாயிற்று. இப்படியிருக்க, ஒருமுறை பாண்டுரங்கர் சொக்கநாதருடைய வீட்டிற்கு வந்திருந்தபோது, இவ்விருவருக்கும் ஏதோ காரணத்தால் அற்ப மனஸ்தாபம் உண்டாயிற்று. ஊசிமுனை அவ்வளவு பிரமாணமுள்ள நெருப்புப்பொறி ஐந்து நிமிஷத்திற்குள் ஆகாயம் வரையிலும் கொழுந்துவிட்டெரியும் பெரு நெருப்பாவதுபோல, முதலில் அல்பமாயிருந்த த்வேஷம் தினேதினே பெரிதாகிவரவே, கடைசியாக இவ்விருவருக்குள் போக்குவரவுநின்று பேச்சும் இல்லாமல் போய்விட்டது. என்றாலும், அம்பலவாணனுக்கும் ஸௌந்தரவல்லிக்குமுள்ள பரஸ்பர அன்புமாத்திரம் கொஞ்சமும் குறையவில்லை. இவ்வாறே சில வருஷங்கள் கழிந்தன.

அம்பலவாணனுக்கு இப்போது வயது இருபதாயிற்று. ஸௌந்தரவல்லிக்கு வயது பதினாறு. சிறுவயதில் உதித்த பால்ய ஸ்நேஹம் இப்போது இவ்விருவருக்கும் காதலாக முதிர்ந்தது. சொக்கநாதருடைய அந்தஸ்தைக்கண்டு அவருடைய புத்திரனுக்குத் தங்கள் பெண்களைத் தருகிறோம் என்று அநேக தனவான்கள் மேல்வந்து முயன்றபோதிலும், அப்பெண்களில் ஒருவரையும் அவன் விரும்பினானில்லை, தான் மணந்தால் ஸௌந்தரவல்லியை மணப்பது; அது கூடாவிடில், கல்யாணமில்லாமல் ஏகாங்கியாகக் காலத்தைக் கழிப்பது என்று அவன் மனவுறுதிகொண்டான். சொக்கநாதருக்கும் பாண்டுரங்கபூபதிக்கும் மனஸ்தாபம் உண்டாவதற்குமுன், ஸௌந்தரவல்லியைத் தன் புதல்வனுக்கே மணஞ்செய்விக்க வேண்டுமென்று அவர் எண்ணியிருந்தார். ஆனால், மனஸ்தாபம் உண்டானவுடனே அவர் தன் புதல்வனை அழைத்து, “அம்பலம்! நான் இன்று உன்னிடம் சொல்வதைக்கவனமாய்க்கேள். பாண்டுரங்கருக்கும் எனக்கும் ஜன்மக்ஷாத்திரம் உண்டாய்விட்டதென்று உனக்குத் தெரியுமல்லவா. ஸரி, அவருடைய பெண்ணின்மீது நீ பிரியம் வைத்திருந்தாய்; அந்த வனிதையும் உன்னை நாடினாள். அப்பெண் சிறந்த குணபூஷணி என்பதற்குத் தடையில்லை. ஆயினும்,

அவளை இன்றுமுதல் அறவே நீ மறந்துவிடுவது அவசியமாகும். என் விரோதியின் புத்ரியை உனக்கு மணஞ்செய்விக்க என்மனம் ஒப்பவில்லை. அக்கன்னிகையைக்காட்டிலும் அழகும் அந்தஸ்தும் மிக்கவளும், உன் மனதிற்கிசைந்தவளுமான ஒரு பெண்ணைத்தேடி உனக்குக் கல்யாணம் செய்துவைக்கிறேன். இதைப்பற்றி நீ கவலை கொள்வதும் முயல்வதும் வேண்டாம். நான் உன்மீது அளவில்லா அன்பும் ஆதரவும் உள்ளவன் என்று உனக்குத்தெரியும். இந்த விஷயத்தில் நீ என் இஷ்டத்திற்கு மாறாக நடப்பாயாகில், என்னுடைய அன்பெல்லாம் வற்றி, அவ்வளவுக்கவ்வளவு கோபம் மூளும். அன்றுமுதல் எனக்கு நீ புத்திரன் அல்லவென்று உறுதியாய் நினைத்துக்கொள். 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பதை மனத்தில் ஊன்றி, என் விருப்பத்தை நிறைவேற்றுவாயாகில், அப்பொழுதான் நீ எனக்கு ஸத்புத்ரன் ஆவாய்" என்றார்.

தந்தைகூறிய மொழிகளைக்கேட்ட அம்பலவாணன், இடியோசைகேட்ட ஸர்ப்பம்போலப் பிரமித்து நின்றான். அவருக்குப் பதில்சொல்ல அவனுடைய நா எழவில்லை. "நான் மிகவும் அருமையாகக் காதலித்த பெண்மணியை 'உடனே மறந்துவிடு' என்று தந்தை சொல்லிவிட்டாரே! நான் எவ்வளவு துரதிருஷ்டசாலி! என் தந்தையினுடைய கட்டளையை இன்றுவரையில் நான் கொஞ்சமும் மீறிநடந்தவனல்லவே. இப்போதும் அவ்வாறே அவரிஷ்டப்படி நடக்க முயலலாமென்றால், அது என்னால் ஸாத்தியமானதல்லவென்று தோன்றுகிறது. கனவிலும் நினைவிலும் ஸௌந்தரவல்லியின் முகமே என் கண்முன் நிற்கின்றதே; என்னசெய்வேன். வெகு ஸுலபமான காரியம்போல, 'அவளை மறந்துவிடு' என்றாரே. அந்தக் காதற்கனியை மறப்பது கூடுமான காரியமா?' ஆயினும், ஒருகால் முயன்று பார்க்கலாம். கடவுள் எனக்குத் துணைபுரிவாராக!" என்று அம்பலவாணன் சற்றுநேரம் தனக்குள் பிரலாபித்து, பிறகு ஒருவாறாகத் தன்னைத்தானே தேற்றிக்கொண்டு, அன்றுமுதல் ஸௌந்தரவல்லியை நினைப்பதில்லை என்ற விரதத்தை அனுஷ்டிப்பானானான். ஆயினும், மனம்நிறைந்த காதலை ஜயிப்பது மனிதரால் கூடுமான காரியமா? அவன் எவ்வளவுக்கெவ்வளவு முயன்றானோ அவ்வளவுக்கவ்வளவு காதலும் மிகுந்து பெருகிற்று. அவன் மனத்தினின்றும் ஸந்தோஷம் அகன்றது; துக்கம் மேலிட்டது. அன்றுமுதல் அவன் தன் ஸ்நேகிதரிடத்திலாவது, தனதருமைத் தாயினிடத்திலாவது, தந்தையிடத்திலாவது தான் காதலித்த பெண்மணியைப்பற்றி ஒரு வார்த்தையும் பேசவில்லை. இவ்வாறு தன் புதல்வன் இருப்பதைக்கண்ட சொக்கநாதர், தன் கட்டளைப்படி அவன் நடப்பதைக்கண்டு மிகவும் ஸந்தோஷித்தபோதிலும், அவனுக்குத் துக்கம்மேலிட்டிருப்பதைக்கண்டு அவன் விஷயத்தில் மனமிரங்கி, அவனுக்கு எந்தமார்க்கத்தால் ஸந்தோஷம் விளைக்கலாமென்று கருதி, தன்னாலியன்றவரையிலும் அவனிடம் பிரீதிபாராட்டி ஆதரித்துவந்தார். ஆயினும், நோயொன்றும் மருந்தொன்றுமானதலால், அம்பலவாணனுடைய துக்கம் கொஞ்சமும் குறையவில்லை.

காந்திமதியம்மாளுக்கு மனம் தவித்தது. எப்போதும் ஸந்தோஷமுகத்துடன் உலாவி வரும் புதல்வன் திடீரென்று வியாகூலமடைந்து நாளடைவில் மனங்குழைவதைக் கண்டால், தாய்க்கு மனந்தாளுமா? அதனிலும், காந்திமதியம்மாளுக்கு ஒரேபிள்ளை. தன் அருமைப் புதல்வன் இவ்வாறு வருந்துவதைக் கண்டு அந்த அம்மாளும் வருந்தினாள். தன் புதல்வனிடத்தில் மிகுந்த அன்புபாராட்டி அவனை உபசரிப்பாளானாள். தனது குலதெய்வமான திருப்பதி வேங்கடாசலபதியை அல்லும் பகலும் தியானித்து, அக்கடவுளுடைய அருளாலன்றித் தன் குமாரனுக்கும் தனக்கும் ஸந்தோஷம் உண்டாகாதென்று துணிந்து, அப்பகவானை அநுதினமும் பிரார்த்தனை செய்தாள்.

ஒருமுறை திருப்பதிக்குச்சென்று அந்தக் கடவுளைத் தரிசித்து வந்தால், தன்னுடைய பெருங்குறை நீங்கும் என்று நினைத்தாள். ஓர் நாள் இரவில் காந்திமதியம்மாள் நித்திரை செய்யும்போது, தான் தனது புருஷனோடும் புத்திரனோடும் திருப்பதிக்குச் சென்றதுபோலவும், அங்கு ஸ்வாமியைத் தரிசித்து மலையினின்றும் கீழிறங்கினவுடன் தனது குமாரனுக்கும் ஸௌந்தரவல்லிக்கும் கல்யாணம் நடந்தேறியதுபோலவும், அன்றுமுதல் தன்குடும்பத்தில் ஸகலவித ஸம்பத்துக்களும் நூற்றுக்கணக்காகப் பெருகினதுபோலவும் கனவுகண்டு விழித்து, "ஹா! என்னகனவு கண்டேன்! எல்லாம் நிஜமாக நடந்ததுபோலவே தோன்றிற்றே. இது ஸ்வாமியின் பெருங்கருணையால் வந்த கனவேபோலும். கடவுளுடைய அருளுக்கு எல்லையுமுண்டோ! நாம் அவரைத் தரிசிக்கவேண்டுமென்று அவருக்குத் திருவுளம் போலும். அவ்வாறே செய்வோமாக. பாலகனைக் காலோடுகையமுக்கிப் பால்புகட்டும் தாய்போல, தாமே என் மனத்தில் தோன்றி, தன்னை வந்து வணங்கித் தரிசிக்குமாறு ஏவின கடவுளின் கருணையேகருணை! ஸ்வாமி! என் குழந்தைபடுங் கவலையைத் தீர்ப்பது உமது பாரம். உம்மையல்லால் தெய்வமில்லை" என்று மனத்தால் வணங்கி, அன்றிரவு கழிந்து, பொழுது புலரும்வரையிலும் கண்ணுறங்காது விழித்திருந்தாள்.

வெளியூர்க்குச் சென்றிருந்த சொக்கநாதர் வீட்டுக்கு வந்தவுடன், காந்திமதியம்மாள் தான் கண்ட கனவை அவரிடம்சொல்லி விரைவிலே ஸ்வாமிதரிசனம் செய்வது நல்லது என்று அவரை வேண்டினாள். அம்பலவாணனுக்கும் ஸௌந்தரவல்லிக்கும் விவாஹமானதாகக்கண்ட கனவைமாத்திரம் அவரிடம் அவள் கூறவேயில்லை. இதற்குக் காரணம் நாம் சொல்லாமலே விளங்குமல்லவா?

## அத்தியாயம்—3.

## மலைக்கடவுள் கோயில்.

பிரயாணத்திற்கு வேண்டிய யாவும் சித்தமாயின. நல்லநாளில் சொக்கநாதர் முதலியோர் எல்லோரும் தம்முரைவிட்டுப் புறப்பட்டு, ஒருவாரம் பிரயாணம் செய்து, எட்டாம்நாள் காலையில் திருப்பதிமலையின் அடிவாரத்திலுள்ள திருச்சானூரையடைந்தார்கள். அங்குத் திருக்கோயில்கொண்டு விளங்கும் அலர்மேல்மங்கை நாயகியைப் பணிந்து இரண்டுநாள் அங்கேயே தங்கியிருந்து, சனிக்கிழமை காலையில் மலையேறி வெங்கடாசலபதியை அனைவரும் தரிசித்தார்கள். ஆறுமலையுங்கடந்து ஏழாவது மலையில் அப்பரமன் நிற்கும் கோயிலையும், ஸ்வர்ணகலசங்கள் வரிசைவரிசையாக நிறைந்துள்ள ஆகாசமளாவிய கோபுரங்களையும், அங்குப் பலதேசங்களினின்று வந்திருந்த ஜனங்களையும், அவர்கள் பக்திவிஞ்சி, "கோவிந்தா கோவிந்தா! வடக்கு மலையானே! ஏழுமலையானே! வெங்கடாசலபதியே! மும்மூர்த்திகளின் ஸ்வரூபமான முதல்வா! இளங்குமரர் கோமானே! நாராயணா!" என்று கூவி ஓலமிடுவதையும், கண்ணுக்கெட்டின தூரம் வரையிலும் உயர்ந்த மலைகளும், அவற்றின்மேல் பச்சைப்பசேலென்று உயர்ந்து வளரும் மரங்கள் செடிகள் புல்பூண்டுகளையும், அம்மலைகளின்மீது ஸஞ்சரித்துப் பறக்கும் வெளுத்த மேகங்களையும், ஆங்காங்கு ஓடும் அருவிகளையும் கண்ட அம்பலவாணன் ஆனந்த பரவசனாகி, இதுகாறும் தன் மனத்தைவிட்டு நீங்காதிருந்த துக்கத்தையும் மறந்தான்.

கோயிலுக்கு வடக்கேயுள்ள பொய்கையில் அனைவரும் ஸ்நாநம்செய்து, தூய உடை தரித்து, நெற்றியில் வெளுத்த நீரணிந்து கோயிலுக்குச் சென்றார்கள் பகவானை விரைவில் தரிசிக்கவேண்டுமென்னும் பேராவலினால், அம்பலவாணன் மற்றெல்லோருக்கும் முந்திச் சென்றான். அவன் ஸந்நிதியில் நுழைந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து கடவுளைப் பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்யலானான்.

1. "தோற்றேன் பல்பிறவி உன்னைக் காண்ப
[தோர் ஆசையினால்;
ஏற்றேன் இப்பிறப்பே இடர் உற்றனன்;
[எம்பெருமான்!
கோற்றேன் பாய்ந்தொழுகும் குளிர்மா
[மலை வேங்கடவா!
ஆற்றேன் வந்தடைந்தேன் அடியேனை
[ஆள்கொண்டருளே. *

2. தெரியேன் பாலகனாய்ப் பலதீமைகள்
[செய்துமிட்டேன்;
பெரியேன் ஆயினபின் பிறர்க்கே உழை
[த்து ஏழையானேன்;
கரிசேர் பூம்பொழில்சூழ் கனமாமலை
[வேங்கடவா!
அரியே! வந்தடைந்தேன்; அடியேனை
[ஆள்கொண்டருளே. *

3. † வரிசேர்ந்திடு சேல்கனை யோவெனும்
இருள் போன்றிடு வேலையு நீலமும்
வடுவாங்கிடு வேல் விழிமாதர்கள்—
[வலையாலே

வளர்கோங்கிள மாமுகை ஆகிய
தனவாஞ்சையி லேமிக மாயையில்
வளர் மாந்தளிர் போனிறமாகிய—வடி
[வாலே

இருள் போன்றிடு கார்குழல் நீழலின்
இழைசேர்ந்திடு பாயலின் மீதுற
இனிதாம்கனி வாயமு தூறல்கள்—பரு
[காமுன்

எமதாம்தன மானவை போனபின்
எவர் வேண்டுவ ராகில மேயினி
...வைநீக்கிட வேயிரு தாளினை—
[அருள்வாயே

கரி...ரி தேர்திரள் சேனையும்
உடன்...ரி யோதனனாதியர்
அவர் மாண்...டவேஒரு பாரதம்—அதி
[லேகி

கனபாண்டவர் தேர்தனி லேயெழு
பரிதூண்டிய ஸாரதி யாகிய
கதிரோங்கிய நேமிய னாமரி—ரகுரா
[மன்

திரைநீண்டிரை வாரியும் வாலியும்
நெடுவான்பயில் மாமரம் ஏழொடு
தசமாம்சிர ராவண னார்முடி—பொடி
[யாக

சிலைவாங்கிய நாரண னார்மரு
மகனாம்குக னேபொழில் சூழ்தரு
திருவேங்கட மாமலை மேவிய—பெரு
[மாளே.!

4. ['பானைவாய்க மூகில்' என்ற காவடிசிந்துமெட்டு.

* (i) ஐயிரண்டு மலையுமேறி ஆழ்ந்தகுளம்
[தன்னிலாடி
ஆலயம் வலம் புரிந்த பின்னர்—உன்
[றன்
தேசுதிகழ் ஸந்நிதியின் முன்னர்
மெய்சிலிர்த்துக் கைகுவித்துக் கண்
[துளிர்த்து வாய்பிதற்றி
மெய்த்த நின்பல் நாமம் ஓதுவோமே—
[நின்முன்
பேயர் என்னப் பாடியாடு வோமே.

(ii) மனைவிமக்கள் சுற்றமென்னும் நினைவி
[லேயமுழ்ந்திநின்று
நீசாரானோம் நாங்களிந்த மண்ணில்—
[யாங்கள்
என்று சேர்வோம் நின்னுலகாம் விண்
[ணில்.
நினைந்து நைந்துன் குணங்களைத்தி நின்
[கருணைக் குரியராக
நீயலவே காத்தருளல் வேண்டும்—
[அன்றேல்
தீய்பிறப்பில் உழலுவோம் பல்லாண்டும்.

(iii) கோபதாபம் ...மோசம் கொலைகளவு
[க்ரூரம் செய்தோம்
குறுக நின்னை மிகவுமஞ்சி நின்றோம்—
[தயைநீ
செய்யில் பாவந் தன்னை இன்றேவென்
[றோம்.

* பெரிய திருமொழி.

† திருப்புகழ்.

* இந்நூலாசிரியர் இயற்றியது.

சாபமாரும் நீலமேகம் வேகமோடு மாரி
[பெய்யும்
மலையிலுற்ற நலவிளக்கே கோவே !—
[கின்னை
அல்லால்உண்டோ விண்ணில் மற்
[றோர் தேவே

(iv) நாரணா ! அலர்மேல் மங்கை நண்ணும்
[மார்பா நாரசிங்கா !
நந்தகோபன் சிறுவனே எம்மானே !—
[பத்தர்
சிந்தை தன்னில் என்றும் ஊறும்
[தேனே !
பூரணா ! ஓ புண்டரீகம் போன்ற கண்ணா !
[புண்ணியத்தின்
பொருளும் வேதப் பொருளும் ஆன
[நாதனே !—வானோர்
பூச்சொரிந்து போற்றிடும் பொற் பாத
[னே !

(v) குன்றெடுத்துக் குடைபிடித்துக் கோவ
[ளர்த்துக் கன்றடர்த்து
கோகுலத்தில் கோபிமாரோ டாடி—
[நாகக்
கொடி உயர்த்தோன் செயல்நினைந்து
[வாடி,
வென்றிதன்னை அர்ச்சுனனார் பெறுவதற்
[காய் வார்பிடித்து
வாசியோட்டி வாகைதந்த வள்ளலே—
[கோது
முற்றியுள்ள எம்மைநீ இன்றென்னலே.

என்றும் இன்னும் பலவாறாகவும் ஸ்தோத்ரம் செய்து, ஸந்நதியினின்றும் வெளியேவந்து, கோயிலை ப்ரதக்ஷணம் செய்வதற்குத் திரும்பினான்.

நிற்க. பாண்டுரங்கபூபதியாருக்கு மிகவும் நண்பரான ஒருவர் சந்திரகிரியில் இருந்தார். அவர் புதியதாக ஒரு மாளிகை கட்டி, அதில் கிரகப்பிரவேசம் செய்ய ஒரு நல்லநாள் பார்த்து, அந்தத் தினத்தில், தன் உறவினர் நண்பர் முதலானோர்க்கு அப்புதுவீட்டில் பெரிய விருந்து செய்தார். அந்த விருந்துக்குப் பாண்டுரங்கரும் அவருடைய மனைவியும் ஸௌந்தரவல்லியும் வந்திருந்தார்கள். சந்திரகிரிக்கும் திருப்பதிமலைக் கோயிலுக்கும் தூரம் கொஞ்சமேயாகையால், அவ்வளவு அருகில் வந்திருந்தும், ஸ்வாமிதரிசனம் செய்யாமல் போனால் தெய்வாபசாரம் நேருமென்று எண்ணி மலைக்கு வந்திருந்தார். அவர் ஆலயத்தில் நுழைகையில், அம்பலவாணன் ஸ்வாமி தரிசனம் செய்து வெளியே வரும்போது அவருக்கு எதிர்ப்பட்டான். தலைநிமிர்ந்து பார்த்தவுடன், பாண்டுரங்கரையும் அவர் மனைவியையும் ஸௌந்தரவல்லியையும் அவன் கண்டான். ஸௌந்தரவல்லியின் நேத்திரங்களும் அம்பலவாணனுடைய கண்களும் ஒன்றையொன்று ஸந்தித்தவுடனே, தான்நெடுநாளாய்க் காணாது திடீரென்று தன் காதலியைக் கண்ட ஆச்சரியத்தாலும் ஸந்தோஷத்தாலும் பிரமித்தவனாய், அவ்வணங்கினையே ஒரு நிமிஷநேரம் உற்று நோக்கிய வண்ணமாயிருந்தான்; பிறகு உடனே தன் செயலைக்குறித்து நாணமடைந்தான். அம்பலவாணன் முகக்குறியைப் பார்த்திருந்த பாண்டுரங்கர் அவன் தலைகுனிவதைக் கண்டு,

"அப்பா ! அம்பலம் ! நீ இங்கு எப்பொழுது வந்தாய்? எதிர்பாராதிருக்கையில் உன்னை நான் திடீரென்று கண்டதில் எனக்கு மிகுந்த ஸந்தோஷம். உன்னைநான் பார்த்து நான்குவருஷங்களுக்கு மேலாகின்றது. நீ ஸௌக்கியமா ? உன் தாயும் தந்தையும் ஸௌக்கியமாக இருக்கின்றார்களா ?" என்று கேட்டார்.

அவருடைய கேள்விகளுக்கு அம்பலவாணன் என்ன பதில் கூறினானென்பது அவனுக்கே தெரியாது. பிறகு பாண்டுரங்கர்,

"அம்பலம் ! தென்னண்டை வீதியில் உத்தராதியார் சத்திரத்திற்கு மேற்கேயுள்ள மாளிகையில் நாங்கள் தங்கியிருக்கிறோம். ஸாயங்காலத்தில் நீ அங்கே வர முடியுமா ? கொஞ்சநேரம் நான் உன்னுடன் பேசி, உனது யோகக்ஷேமங்களை அறிய விரும்புகிறேன் ; வரக்கூடுமோ உன்னால் ?—ஸ்வாமி தரிசனம் செய்ய

நேரமாகிறது. நாங்கள் போய்வருகிறோம்" என்று கூறினர்.

"அப்படியே அவசியம் வருகிறேன் மாமா" என்று அம்பலவாணன் பதில் சொன்னவுடன், பாண்டுரங்கரும் அவருடனிருந்தவர்களும் கோயிலுக்குள் சென்றார்கள். அம்பலவாணனோ, தான் நின்ற நிலையிலேயே ஸ்தம்பம்போல் நின்றான். அவனுடைய மனமோ அந்தும் ஸுந்தரவல்லியைப் பின்பற்றிச் சென்றது.

"ஆகா! இது ஆச்சரியமாகவே யிருக்கின்றது. ஸுந்தரவல்லியை இங்கே ஸந்திப்பேனென்று நான் ஒருபொழுதும் எண்ணினதில்லை. அவளை நான் பார்க்க நேர்ந்தது ஸ்வாமியினுடைய அளவில்லாத கருணையின் பொருட்டே. அவளும் என்னை அன்புடன் உற்று நோக்கினாள். அவளுடைய உடம்பு இப்போது சற்று இளைத்திருக்கின்றது. ஒருவாறு துக்கத்தால் வாடிய முகத்தோடு தோன்றினாளே; என்ன காரணமோ விளங்கவில்லை. எல்லாவற்றையும் இன்று ஸாயங்காலம் கண்டறிவோம். அதுவரையில் எப்படி காலங் கழிப்பதோ—" என்றிவ்வாறு அம்பலவாணன் பலவிதமாகச் சிந்தித்துக்கொண்டே ஸந்நிதியைப் பலமுறையும் வலம்வந்து, கொஞ்ச நேரம் சென்றபின் வீட்டுக்குத் திரும்பினான்.

சொக்கநாதரும் காந்திமதியும் அவனுக்கு முன்பே வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்டபடியால், அவர்கள் பாண்டுரங்கரைக் காணவில்லை.

எஸ். நரசிம்மாச்சாரியர், பி.ஏ., பி.எல்.

---

## Cultivation of Onians.

## வெங்காய சாகுபடி.

வெங்காயமானது தோட்டக்கால்பயிரைச் சேர்ந்தது. இது சாதாரண ஜனங்களுக்கு உணவுப்பொருளாக உபயோகப்படுகின்றது. ஆகவே இது பலவிடங்களிலும் ஏராளமாக விற்பனையாகின்றது. இப்பயிர் செய்வதற்குக் குளிர்காலமே ஏற்றது. மழை அதிகம் தேவையில்லை.

### நிலம்.

வெங்காயப்பயிர் செய்வதற்கு நல்ல வடிகால் வசதியுள்ள நிலமே சிறந்தது. ஆனால், களிப்பான நிலம் ஏற்றதன்று. பூமியானது மிகவும் கெட்டியாயிராமல் புலபுலத்த மண்ணையுடையதாயிருக்கவேண்டும். ஏனெனில், இதன் கிழங்குகள் பூமியிலேயே வளர்ந்து பெரியதாகவேண்டியிருக்கின்றன. நல்ல வளமையுள்ளதும் கொஞ்சம் ஆழம்வரை மண்புலபுலத்தும் உள்ள எந்த பூமியிலும் இப்பயிர் செய்யக்கூடும்.

### நிலத்தைப் பண்படுத்தல்.

இப்பயிர் செய்யப்படும் பூமியை ஐந்தாறு முறை சுமார் ஒன்பது அங்குலம் ஆழத்துக்கு நன்றாக உழவேண்டும். உழுவதற்கு முன்னால் ஏக்கர் 1-க்கு 10 டன்னுக்குக் குறையாமல் நல்ல தொழுவத்தெரு போடவேண்டும். பிறகு எருவை நிலம் முழுதும் நன்றாகப் பரப்பி புல் பூண்டு முதலியனவற்றைப் பிடுங்கி எறிந்துவிடவேண்டும்.

### நாற்றங்கால்.

நாற்றங்காலை நன்றாக உழுது மண்கட்டிகளில்லாமல் நன்கு புழுதியாக்கவேண்டும். அதிகமாக உரம்போடவேண்டும். பிறகு நிலத்தைப் பாத்திகளாகப் பிரிக்கவேண்டும்.

### விதைவிதைத்தல்.

நாற்றங்காலில் விதையைத் தூவும்போது ஒவ்வொரு பாத்தியிலும் விதை ஸமமாக விழும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். ஒரு ஏக்கர் நிலத்தில் நட நாற்றுக்களுக்கு 10 முதல் 15 ராத்தல்விதைவிட்டால்போதும். நாற்றங்காலில் விதைகள் முளைக்கிறவரையில் வாய்க்கால் மூலமாய் ஜலம் பாய்ச்சக்கூடாது. கையில் ஜலத்

தைத் தெளிப்பதுதான் நல்லது. ஜலம் தெளிப்பதானது பிரதிதினமும் இரண்டுமுறை செய்யப்படவேண்டும். விதைகள் நன்றாக முளைத்தானபிறகு பாத்திகளுக்கு வாய்க்கால் மூலமாய்த் தண்ணீர் பாய்ச்சலாம். நாற்றங்காலில் களைகள் இல்லாமல் „பார்த்துக்கொள்ளவேண்டும். நாற்றுக்கள் சுமார் 6 அங்குலம் உயரமானவுடன், அவற்றைப் பிடுங்கி உடனே வயலில் நடவேண்டும்.

நாற்று நடுதல்.

நாற்று நடப்படும் நிலமானது முன்கூறியபடி நன்கு சீர்திருத்தப்பட்டு, பிறகு பாத்திகளாகக் கட்டப்படவேண்டும். இப்பாத்திகளில் நாற்றங்காலிலிருந்து நாற்றுக்களை பிடுங்கிக்கொண்டு வந்து நடவேண்டும். நாற்றங்காலிலிருந்து நாற்றுக்களை பிடுங்குவதற்குமுன்னால், அதற்குத் தண்ணீர் பாய்ச்சவேண்டும். ஏனெனில், நாற்றுக்களை பிடுங்கும்போது அவை ஒடியாமலிருக்கும். நாற்றுக்களைப் பிடுங்கினவுடனே அவற்றின் வேர்களில் உள்ள மண்ணோடு கூடைகளில் ஜாக்கிரதையாக வைத்திருக்கவேண்டும். நடுவதற்குமுன்னால் அவற்றின் தழைகளை நறுக்கிவிடுவது நல்லது. நடப்படும் நிலத்திற்கு ஜலம் பாய்ச்சி மண் இளகியவுடன், நாற்றுக்களை நான்கு அங்குலத்துக்கு ஒன்றாக நடவேண்டும். நாற்றுக்களை நட்ட இரண்டு மூன்று நாட்கள் கழித்து நிலத்திற்கு ஜலம் பாய்ச்சவேண்டும். பிறகும், அதேமாதிரி செய்யவேண்டும். அதற்குள் நாற்றுக்கள் வேர்பிடித்துக்கொள்ளும். இதற்கப்பால் பத்து தினங்களுக்கு ஒரு முறை ஜலம் பாய்ச்சினால் போதும். தேவையானபோது களை பிடுங்கிக் கொத்தலும் அவசியமாகும்.

பலன்தரும் காலம்.

இப்பயிரானது ஐந்தாறு மாதங்களில் பலன் தரும். இது நட்ட நாலு மாதங்களுக்கெல்லாம் பூக்க ஆரம்பிக்கும். அப்பூக்களை கிள்ளி எறிந்துவிடவேண்டும். பிறகு பயிர் முதிர்ந்ததும் அதன் இலைகள் மஞ்சள் நிறமாய்ப் போய்க் கீழேவிழும். இக்குறியைக் கொண்டே பயிர் முற்றிவிட்டதென்று அறிந்துகொள்ளலாம்.

மாஸூல்.

வெங்காயமானது அதிக ஆழத்தில் கிழங்கு வைப்பதில்லை. கிழங்குகள் தரை மட்டத்திற்கு ஸமீபத்திலேயே யிருக்கும். இதனால் கிழங்குகளை மிகவும் ஸுலபமாய்ப் பிடுங்கிவிடலாம். கிழங்குகளைப் பிடுங்கினதும், அவற்றின் இலைகளையும் வேர்களையும் நறுக்கிவிட்டு மேலுள்ள புரைகளையும் எடுத்துவிடவேண்டும். நல்ல கிழங்குகளோடு காயம்பட்டவற்றைச் சேர்க்கக்கூடாது. அப்படி சேருமானால், நல்ல கிழங்குகளும் கெட்டுப்போகும்.

ஸுமாராக வளமுள்ள நிலத்தில், மாரிகாலத்துப் பயிரில் ஏக்கர் 1-க்கு சுமார் 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் பவுண்டு வரையில் வெங்காயம் கிடைக்கும். இது சற்றேறக்குறைய ரூ. 200 வரை விலைபோகும்.

---

## Some Useful Hints.

## சில உபயோகமுள்ள குறிப்புக்கள்.

### பிரஷ் கெடாமலிருக்க.

தலைமயிரைக் கோதும் பிரஷ்ஷை உபயோகித்தபிறகு, அதில் படிந்திருக்கும் எண்ணெயைப் போக்குவதற்கு ஸோப்பைக்கொண்டு கழுவுவதுண்டு. பிறகு அது மறுபடியும் விறப்பாக இருக்க, அதைப்பாலும் ஜலமும் ஸமமாகக் கலந்த ஜலத்தில் சற்றுஊறவைத்து, பிறகு எடுத்து அனலில் காட்டினால், அது உலர்ந்து பழைய நிலைமையை யடையும்.

### ஜமக்காளங்களில் விழும் இங்கிக்கரைகளைப் போக்க.

ஜமக்காளங்களில் இங்கிக்கரை விழுந்தால், உடனே ஒரு எலுமிச்சம்பழத்தை இரண்டு துண்டாக நறுக்கி அதன்மேல் தேய்க்கவும். பிறகு அந்த இடத்தை ஒரு மிருதுவான துணியைக்கொண்டு துடைக்கவும். அப்படியும் கரை விடாவிட்டால், எலுமிச்சம்பழத்தை உப்பில் தோய்த்துக் கரையின்மேல் தேய்க்கவும்.

### ஒட்டுமோஞ்செடிக்கு எரு.

ஒட்டுமோஞ்செடிக்கு அதிகமான எரு ஒன்றும் தேவையில்லை. செடி வைக்கும்போது குழிதோண்டி அதில்சப்பாத்தியைத் துண்டுகளாக வெட்டிப் போட்டு, தண்ணீர் பாய்ச்சி மக்கவைத்து, பிறகு அதில் மண்ணைத்தள்ளி செடியை வைத்துவிடவேண்டும். அதன்பின்பு செடி வளர்ந்ததும், அதனின்று விழும் சருகுகளை அதன் கீழேயே மட்கும்படி செய்ய வேண்டும். இதுவே அதற்குச் சிறந்த எருவாக உபயோகப்படுகின்றது. மட்கின இலை எருவில் ரஸாயன ஸத்துக்கள் அடங்கியிருக்கின்றன.

### பூட்ஸ்களைச் சுத்தம்செய்தல்.

பூட்ஸ்கள் நன்கு பளபளப்பாயிருக்கவேண்டுமானால், அவற்றைத் துடைத்துக் கறுப்பு பாலிஷ் போடும்போது, அதோடு கொஞ்சம் ஆறின தேயிலைக் கஷாயத்தையும் கலந்து உபயோகிக்கவேண்டும். இப்படிச் செய்தால், பாலிஷ் செய்யப்பட்ட பூட்ஸ் மிகவும் பளபளப்பாயிருக்கும்.

### டைப்ரைடிங் இங்கிக் கரைகளைப் போக்க.

டைப்ரைடிங் இங்கிக் கரைகளைப் போக்க, கரை செய்யப்பட்ட இடத்தை 24 மணிநேரம் டர்பன்டைனில் ஊறவைக்கவேண்டும். பிறகு அதன்மேல் கொதிக்கவைத்த ஸோடா ஜலத்தை ஊற்றி அலசி உலரவைத்தால், கரை நீங்கிவிடுகிறது.

### ஜன்னல்களைச் சுத்தம் செய்தல்.

ஜன்னல்களை ஸோப் ஜலத்தைக்கொண்டு சுத்தம் செய்வதைவிட, கொஞ்சம் அமோனியா கலந்த ஜலத்தினால் சுத்தம் செய்வது நல்லது.

### சுவர்களில் ஒட்டப்பட்டிருக்கும் காகிதங்களில் எண்ணெய்ப் பசை.

சிலவிடங்களில் சுவர்களில் அலங்காரமாயிருப்பதற்காக வர்ண காகிதங்கள் ஒட்டப்படுவதுண்டு அவற்றில் எண்ணெய் பட்டுவிட்டால், ஓர் துணியை ஸ்பிரிட்ஸ் ஆப் ஒயினில் நனைத்து மெதுவாக அதன்மேல் துடைத்தால், எண்ணெய்ப்பசை நீங்கிவிடும்.

### கிச்சிலிப்பழம் தோலை உரித்தல்.

கிச்சிலிப்பழம் தோலை மிகவும் எளிதாக உரிக்கவேண்டுமானால், அதை அரைமணிநேரம் வெந்நீரில் ஊறப்போடவேண்டும். பிறகு அதை எடுத்து உரித்தால், வெகு சுலபமாக தோல் உரிபடும்.

### கறவை மாடுகளுக்கு வெந்நீரைக் குடிக்க வைத்தல்.

கறவை மாடுகளுக்கு வெந்நீரைக் குடிக்க வைத்தால், அவற்றிற்குப் பால் விருத்தியாகின்றதென்று சொல்லப்படுகின்றது.

---


### தேசாபிமானிகளின் சரித்திரங்கள்.

"பாரதபூஷண்" டாக்டர் எஸ். சுப்பிரமணிய ஐயர் ... 0 12 0
இதில் டாக்டர் எஸ். சுப்பிரமணிய ஐயரின் ஜீவிய சரித்திரமும், அவரது அரிய உபந்நியாஸங்களும் அடங்கியுள்ளன.

மோஹனதாஸ் காந்தி ... 0 5 0
இதில் இவரது ஜீவிய சரிதமும், இவர் இந்தியருக்காகப் பாடுபட்ட பல விஷயங்களும்; இவருடைய சில பிரசங்கங்களும் அடங்கியுள்ளன.

ஸ்ரீமதி ஸரோஜினிதேவி ... 0 4 0
இதில் இந்திய கவி ஸ்ரீமதி ஸரோஜினிதேவியின் ஜீவிய சரிதமும் அவருடைய அருமையான பிரசங்கங்களின் சாராம்சமும் அடங்கியுள்ளன.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
135, தேவராஜ முதலி தெரு, மதராஸ்.

# ஆமணக்குப்பயிர்.

[பண்டித வி. சுப்பிரமணிய ஐயர் எழுதியது.]

## பயிரின் வகைகள்.

சிற்றாமணக்கு, நாட்டுக்காட்டாமணக்கு, பேராமணக்கு, சீமைக் காட்டாமணக்கு என்று ஆமணக்குப் பயிரில் நாலுவகை உண்டு. சிற்றாமணக்கு, பேராமணக்கு ஆகிய இரண்டு பயிர்களும் சாதாரண புன்செய்நிலங்களிலும் ஆற்றுப்படுகைகளிலும் ஜனங்களால் அவற்றின் விசேஷமான உபயோகத்தை உத்தேசித்துப் பயிர் செய்யப்படுகின்றன. மற்ற இருவகை ஆமணக்குப் பயிர்களும் நாட்டில் எல்லாவிடங்களிலும் வேலிப் பயிராக வைத்துப் பயிர் செய்யப்படுகின்றன.

## நாட்டுக் காட்டாமணக்கு.

நாட்டுக் காட்டாமணக்கு, சீமை காட்டாமணக்கு ஆகிய இவைகள் மழைபெய்த ஈரத்தில் கிளைகளாக வெட்டிவைத்துப் பயிர் செய்யப்படுகின்றன. இவைகளை விதைகளைக்கொண்டும் பயிர் செய்யலாம். ஆனால், அம்முறையில் செடிகள் வளருவதற்கு நாள் செல்லும். இக்காரணம்பற்றியே இம்முறையானது அதிகமாக அனுஸரிக்கப்படுவதில்லை.

## உபயோகம்.

நாட்டுக்காட்டாமணக்கின் இலை பயிர்செய்யப்படும் நிலத்தில் வளமைக்குத் தக்கபடி வெண்ணிறமாயும், பச்சை நிறமாயும் இருக்கும். செழுமையாய் வளர்ந்த இலை இரண்டு கையளவு அகலமிருக்கும். நாட்டுக்காட்டாமணக்குப் பட்டையை ஜ்வரகஷாயத்திற்குச் சேர்ப்பதுண்டு. அதன் பாலானது புண்ணை ஆற்ற உபயோகப்படுகின்றது. நெல் குத்தின உமியையும் காட்டாமணக்கு இலையையும் கலந்து சட்டியில்போட்டு வறுத்து ஒத்தடங் கொடுக்க, சூலைநோயும் ஜன்னி நோயும் குணமடையும். சிறுபிள்ளைகள் இலைத்தொன்னையில் காட்டாமணக்குப் பாலைக் கறந்து, புல்லினால் செய்த வளையம்போன்ற முடிச்சை அதில் தோய்த்து எடுத்து வாயினால் ஊத, அது அழகான ரஸகுண்டுகளைப்போல் ஆகாயத்தில் பறப்பது அவர்களுக்கு வேடிக்கையாயிருக்கும். இந்த ஆமணக்குப் பருப்பில் எண்ணெய் விசேஷமாக இருப்பதனால், கைத்தொழிலாளிகள் இதை மிக்க லாபகரமாக உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

## சீமை காட்டாமணக்கு.

சீமை காட்டாமணக்கு நம்நாடெங்கும் வேலிப்பயிராக உபயோகப்படுகின்றது. இந்த ஆமணக்கின் பாலுக்குப் புண்ணை ஆற்றும் சக்தி மிகுதியும் உண்டு. ஆனால், நாட்டுக் காட்டாமணக்குப் பாலைப்போலிராமல், இப் பாலைப் புண்ணில் போட்டால் எரியும். இவ்வாமணக்குக் கிளைகளையும் தறித்து மழைகாலத்தில் வேலியோரங்களில் நட்டால், ஒருமாத காலத்திற்குள் அவை கப்புங்கிளையுமாய் வளர்ந்து, வேலி மிகவும் பந்தோபஸ்தாய்விடும். இச்செடிகள் வளரும் நிலத்தின் தன்மைக்கிணங்க, அவற்றின் இலைகள் பச்சைநிறமுள்ளவையாயும், சிவந்த நிறமுள்ளவையாயும் இருக்கும். இந்த இலை கையினால் தொட்டால் பிசுக்கென்று ஒட்டிக்கொள்ளும் தன்மையையுடையது. இந்த ஆமணக்கு விதைகளினாலும் பயிராகும். சில ஸமயங்களில் இது காட்டுத்தனமாய் கண்டவிடங்களில் வளர்ந்து வருஷக்கணக்காக ஜீவதசையுடனிருக்கும். இதன் தழைகளை நிலத்திற்கு உரமாக சேற்றில் மிதித்து உபயோகிக்கிறார்கள்.

## சிற்றாமணக்கு.

சிற்றாமணக்குப்பயிர் சாம்பல் கலந்த நத்தவாய் நிலங்களில் ஏராளமாய்ப் பயிராகும். அது பயிர் செய்யப்படும் பூசாரத்திற்கும் நீர்வளமைக்கும் தகுந்தாற்போல ஐந்து வருஷகாலமளவும் அதற்குமேலும் கப்பும் கிளையுமாக ஜீவதசையுடனிருந்து, ஏராளமாகப்பலன் தரும். ஐந்து சிற்றாமணக்குக் கொட்டைகள் ஒரு

பேராமணக்குக் கொட்டையின் பருமனுக்குச் சமானமாகும். ஒரு பட்டணம்படி சிற்றாமணக்குக் கொட்டையைப் புழுக்கிக் காயவைத்து இடித்துக்காய்ச்சினால், 24 ரூபாய் எடையுள்ள ஒரு சேர் ஆமணக்கு எண்ணெய் கிடைக்கும். இந்தப்பயிரை ஏதோ சில இடங்களில்தான் செய்து எண்ணெய் உண்டாக்கி உபயோகிக்கிறார்கள். இச்சிற்றாமணக்கு எண்ணெய் பேராமணக்கு எண்ணெயைக் காட்டிலும் வைத்திய விஷயத்தில் மிகவும் உபயோகமாதலினால், இது வைத்தியர்களால் அதிகமாகக் கொண்டாடப் படுகின்றது.

பேராமணக்கு.

பேராமணக்குப்பயிர் சாதாரணமாய்ப் புன்செய் நிலங்களில் ஆனி ஆடி மாத காலங்களில் கரணை மஞ்சள் சாகுபடி செய்யும்போது அவற்றுடன் பயிரிடுவதுண்டு. இப்படிச்செய்யப்படும் பயிர் தைமாதம் வரையில் பலனைக்கொடுத்துப் பிறகு பட்டுப்போகின்றது. கரணைமஞ்சளுக்குப் பாய்ச்சும் தண்ணீரே இப்பேராமணக்குக்கும் பிரயோஜனப்படுகின்றது. மேற்கூறிய கரணை மஞ்சள் வெட்டப்பட்டுப்போனபிறகு, பேராமணக்குப் பயிருக்குக் காவலும் தண்ணீரும் இல்லாததனால், அது தானாகவே பட்டுப் போகின்றது.

(இன்னும் வரும்)

## How to Spend Leisure Hours.

BY MR. D. S. NESAMANI.

## விடுதிப்பொழுதைக் கழிக்கும் ஆறு.

[272-ம் பக்கத் தொடர்ச்சி.]

(ஆகவே, நூல்பயில உன்னுவார் கற்றறிந்த ஆன்றோர் உதவிகொண்டு தம் மனநிலைக்குகந்த புஸ்தகங்களைத் தேர்ந்தெடுத்துக் கற்கவேண்டும்) இவ்வான்றோர் தம் குணநடவடிக்கைகளுக்கு இணக்கமுடையவராய்த் தம்மிடம் மெய்ந்நட்புடையவராயிருப்பின் நலம்; ஏனெனில், மநுஷ்யர் தம் ஆசாரநடைகளுக்கொத்த ஒழுக்கமுடையாரிடத்தும், தம்மின் சிறந்தோரிடத்தும் அன்பைச் செலுத்துகின்றனரே யன்றி, தம் குணவபேக்ஷைகளுக்கு முற்றும் விரோதியானுடன் ஒட்டுவதில்லை. ஆதலின், தம் மனநிலைக்குகந்த புஸ்தகங்களை, நூலநுபவமுடையவரும், தம் உள்ளத்தைக் கொள்ளைக் கொண்டவருமான மெய்ந்நண்பரது உதவிபெற்றன்றோ ஒருவர் எளிதில் தேர்ந்தெடுக்கலாம்? இன்னணம் கூறியதனால், "அறிவு, அருள், நிறை, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி, வெறுப்பு முதலிய அருங்குணங்களுடைய மனிதன் ஸ்வாதீனமுள்ளவனல்லனோ? தான் கற்கத்தகும் நூல்களை அவனே தேர்ந்தெடுக்கும் ஆற்றல் உடையவனல்லனோ? ஜான்ஸன் பண்டிதரும், 'நீ எந்நூலை வாசிக்க அவாவுகின்றனையோ, அந்நூலையே ஓதுக' என்று கூறினாரே! என்று ஆசங்கிக்கும் சிலர், மநுஷ்யர் பராதீனரல்லராயினும், தம் உரிமையை அவர்கள் சற்று மட்டுடன் எக்காலத்தும் செலுத்துவதே பெரிதும் நன்மைபயக்கும் என்பதை நினைவு கொள்ளவேண்டும். தம் நண்பர் தமக்கெனத் தேர்ந்தெடுத்த பல புஸ்தகங்களில் தமக்கு விருப்பமான சிலவற்றைத் தெரிந்தெடுத்து கற்பினும், மனுஷ்யர் ஸ்வாதீனம் குன்றாது என்பதற்கு, ஸந்தேஹமில்லை. விவேகம், குணம், தனம், ரூபமென்னும் அருமையான குணங்களுடன் நற்குலத்துதித்த புருஷர் தம் ஒழுக்கத்தைத் திரித்து அன்னாரைக் கேவலம் மிருகங்களுடன் ஒற்றுமைப்படுத்தவல்ல கேடென்னும் கொள்ளைநோயைப் பரவச்செய்யும் நுண்ணிய க்ருமிகள் அழகிய கட்டிடங்களுடைய

பல நூல்களால் பரவும் இக்காலத்தில், தம் ஸ்நேஹிதர் தம்மிடம் புகழ்ந்தொப்பித்த நூல்களில், தம் மனதைக்கவர்ந்துகொண்டவைகளை ஒவ்வொன்றாக வாசிப்பதனால் நன்மையும் இன்பமும் விளையுமென்பது தேற்றம். களவையும் கற்று மறக்கவேண்டுமெனினும், களவாடக் கற்றுக் களவாடிக் காராக்கிரகம் புகாதவர் எத்தனைபேர்?

‘எவ்வெந்நூல்களைக் கற்கலாம்?’ என்னும் வினாவிற்கு ஒருவாறு உத்தரமளிக்கலாம். இவ்வகுப்பு நூல்களை, காவ்யங்களான செய்யுணூல்கள், சரித்ரஸம்பந்தமான நூல்கள், மத நூல்கள் (இவ்வகுப்பிற்படும் நூல்களிலும் பல செய்யுள் ரூபமுடையன), விஜ்ஞான, தத்வ முதலிய சாஸ்த்ர நூல்கள், கற்பித கதைகள் என வகைப்படுத்தலாம். இவைகளைப்பற்றிப் பின்னை கூறுவோமெனினும், கற்பித கதைகளைப்பற்றி ஈண்டுக்கூறல் பொருந்தும். மலிந்து கிடக்கும் அபிநவகதைகளிற் பல, யாதேனும் ஒரு தேசசரித்ரத்தைப்பற்றியேனும், நீதிபோதனைகளைப்பற்றியேனும் கிஞ்சித்துங் கூறாது, நன்னெறியிலமைந்தார் படிக்கற்கேலாத இடக்கரான அல்லது ச்ருங்காரரஸமான விஷயங்கள் பொதிந்துகிடப்பன வாசிப்பவரின் அறிவின்கூரை மழுக்குவன. இதனால் நாம் அபிநவகதைகளெல்லாம் இத்தகைய தீய விதைகளை வித்துவன என்று பொருட்படுத்தினோமல்லோம். காலஞ்சென்ற வேதநாயகம் பிள்ளையவர்களின் பிரதாபமுதலியார் சரித்ரத்தையும், தாண்டவராய முதலியாரவர்கள் மொழிபெயர்த்த பஞ்சதந்திரத்தையும், முத்துஸ்வாமி அய்யரியற்றிய சென்னப்பட்டணத்தின் சரித்ரஸம்பந்தமான பத்மினி என்னும் கதையையும் இவைபோன்ற மற்ற புனைந்துரை நூல்களையும் குற்றமுடையன என்று கூறத் துணிவார் யாவர்? நல்ல நாவல்களிற் பல வாசிப்பவரின் கற்பனாசக்தியை விசாலிப்பித்து, பலரைத் தீவழியினின்று விலக்கி நல்வழியிற் செலுத்தியிருக்கின்றன; ஆயாஸங்கொண்ட மனங்களைத் திடப்படுத்தியிருக்கின்றன; மெலிந்த மனங்களுக்கு வலிதந்துள்ளன. எனினும், அபிநவகதைகளல்லனவான நன்னூல்களை வாசிக்கக்கூடியவாயிருக்கையிலும் அபிநவகதைகளையே வாசித்தல் நன்றன்று.

மற்றும், புஸ்தகங்களை அவை முதன்முதலாக ப்ரசுரிக்கப்பட்ட ஒருவர்ஷம் தேயுமுன் கூடுமானால் வாசியாதிருத்தல் நன்மைதரும் என்று எமெர்ஸன் என்னும் அமெரிக்க வ்யாஸக்கருத்தா கூறுகின்றார்.

கற்கற்பாலனவாம் நூல்களனைத்தும் ஒரு தன்மையனவே என்றெண்ணுதலும் தவறு. இக்குறிப்பைநாம் பெருக்காது ப்ரான்ஸிஸ் பேக்கன் என்னும் தத்வஜ்ஞானியின் இனிய மொழிகளை எடுத்துரைப்போம்: “சிலபுஸ்தகங்கள் ருசிக்கப்படவேண்டியன; சில விழுங்கப்படத்தகுவன; சில மெல்லப்பெற்று ஜீர்ணிக்கப்பெறுதற்குரியன:—என்றதனால், சிலநூல்களில் சிலபாகங்களைபட்டும் வாசிக்கவேண்டும். சில முற்றும் வாசிக்கப்படத்தகுந்தன, என்றாலும், அதிக ஜாக்ரதையுடனன்று; சில முற்றும் அதிஜாக்ரதையோடும் கருத்தோடும் கற்கப்படத்தக்கன என்றபடி.”

“கல்வி கரையில; கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கின், பிணிபல;—தெள்ளிதின்
ஆராய்ந்(து) அமை(வு) உடைய கற்பவே;
நீர் ஒழியப் பாலுண் குருகின் தெரிந்து”

என்பது சமணமுனிவர்களியற்றிய நாலடிநானூற்றில்.

இனி, பண்பாற்றும் நெஞ்சத்தவர்களான சொல்லேருழவர் செய்த நூல்களைப்பற்றிக் கூறுமுன், நூல்பயில உன்னுவார் அவச்யம் அறியவேண்டிய விஷயமான மனோசக்திகளைப் பற்றியும், நூற்பயிற்சிக்கு ஏற்றபடி அவற்றைப் பழக்கும் விதத்தைப்பற்றியும் பொழிந்துரைத்தல் முறையாம். தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்ப்பென நால்வகைப்படும் கல்விநூல்களைப் பயில்வார் கவனிக்கத்தகும் மனோசக்திகள் (கற்றவற்றை) உணருஞ்சக்தி, ஞாபகசக்தி என்பனவே.—நாம் உற்

ருசாயும் விஷயங்களை ஐயந்திரிபற முதற்சக்தியால் தேர்ந்து தெளிகிறோம். ஞாபகசக்தியால் ஒருகால் நம்கண், செவ்வழியாய் நெஞ்சுகளை அடைந்தவற்றை வேண்டுங்கால் வருவித்து நம் மனத்தின்முன் நிறுத்திச் சிந்தனையென்னும் நம்மனக்கண்களால் அவற்றைச் சந்தித்துக் களிப்போம். இவ்விரண்டு சக்திகளும் பித்தரல்லாதார் அனைவரிடமும் பொருந்தியிருப்பனவெனினும், புத்திஸ்வாதீனர் அனைவரும் இவற்றை ஒரேயளவாகப் பெற்றிருப்பவர்களல்லர். ஆகவே, கல்வியில் முன்னேற்றமடைய விரும்புபவர் இச்சக்திகளை வ்ருத்திசெய்துகொள்ள வேண்டும்.

இவ்விரண்டு சக்திகளும் கூர்ந்தாராயும் பழக்கமுடையவரிடத்து விஞ்சியிருக்கும். என்றதனால், ஒருவருக்குத் தாம் கற்கும் விஷயத்தில் தமக்கு எவ்வளவு பற்றுள்ளதோ அவ்வளவாக அது அவர்க்கு விளக்கமுறும் என்பது பெறப்பட்டது; என்னை? தாம் வாசிக்கும் நூலிடத்துப் பற்றுக்கொள்ளுமாறு அந்நூலின் ஒவ்வொரு வாக்யத்தையும் மயக்கமற உணர்ந்துகொள்ளுதலாலே என்க. அந்நூலின் ஒவ்வொரு வாக்யத்தையும் மயக்கமற உணர்தல் என்பது, நிகண்டு, இலக்கணம் முதலிய கருவி நூல்களை உபயோகித்து ஒரு வாக்யத்தையாக்கும் மொழிகளின் பரியாயங்களையும் சில இலக்கணக் குறிப்புக்களையும் கற்றுக்கொள்ளுதல் மாத்ரமன்று, ஒரு சொல்லுக்கும் மற்றைப்பதங்களுக்கும் உள்ள சம்பந்தத்தைத் தெரிந்துகொண்டு, பிரதிமொழியும் அவ்வாக்கியத்தினுள்ள கருத்திக்கு எவ்வண்ணம் சுவை தருகிறதென்று, பின் அவ்வாக்கியத்துக்கருத்தை நுட்பமாய்ச் சோதித்துப் பிழைதிருத்திக் கொள்வதேயாம். இது மிக்க ஜாக்ரதையுடன் தாம் தெரிந்துகொண்ட நூலில் ஒரு சிறுபாகத்தைக் கவலையுடனும், மந்தகதியுடனும், ஆழ்ந்த சிந்தனையுடனும், கற்கும் விஷயத்திற்குரியவல்லாதனவாம் விஷயங்களைக் கொஞ்சமேனும் கருதாது, வேண்டுமாயின் மீட்டுமீட்டும் அப்பாகத்தை வாசித்து, அப்பாகத்தைத் தம்மனத்தில் ஐயந்திரிபறப் பொருத்தியபின்பே வேறு பாகத்தைப் படிக்கவாரம்பிப்பதனால் ஆகும்: "நுண்ணுணர்வின்மை வறுமை." ஆயினும், பைங்கிளிபோல் ஒரு புஸ்தகத்திலுள்ளவற்றையெல்லாம் மனனஞ்செய்ய முயலுவார், சுடரைத்தூண்டவேண்டி அதனை ஊதியே தொலைப்பவரன்னர். நம்மாயுள் குறியது; வாசிக்க வேண்டிய நூல்கள் பலவாயிருக்க, ஒரு நூலையே மேலுமேலுங் கற்றுப் புலமைத்திறம் நிரம்பப் பெறுதிருப்பது சிறப்பன்று. எனவே, கற்றவற்றின் கருத்தை தம்மனதில் இருத்திக் கொள்வார்க்கு அது சாலும்.

ஒரு நூலைக் கற்கத்தொடங்கியபின் எவ்வித காரணத்தை முன்னிட்டும் அதனை முற்றுந்தவிர்த்து மற்றொருநூலை வாசிக்கத் தொடங்குதல் ஒருவரின் கல்வியபிவ்ருத்திக்கு ஊறுவிளைக்குமேயல்லது நன்மையை அற்பமேனும் தாராது. ஆதலின், தொடங்கிய நூலை முடித்தேதீரவேண்டும். இலைதழைகள் நிறைந்திருக்கும் இடத்தில் அவற்றைச் சிறிது உட்கொண்டதும், அவ்விடத்தினின்று பசுமைநிறந்தெரியும் மற்றோரிடத்திற்குச் சென்று அங்குச் சிறிது இலை உட்கொண்டதும் இன்னொரு பக்கம் செல்வதனால் சிறிது சிறிதே மேயுமியல்புடைய ஆட்டிற்கு வயிறு நிரம்புவதில்லை யென்பது, பெரியோர் கூற்று.

இம்முறைகளை அநுசரிப்பவர் தாம் கற்கும் விஷயத்தைத் தெற்றெனத்தெளிந்து மகிழ்வர் என்பர் பெரியோர்.

(இன்னும் வரும்.)

தா. ஸா நேசமணி.

---

## ஹஸ்தரேகை சாஸ்திரம்.

இது ஹஸ்த ரேகைகளைக்கொண்டும், ஹஸ்தலக்ஷணத்தைக்கொண்டும் மனிதர்களின் நடவடிக்கைகளை நிர்ணயிக்கும் ஓர் சாஸ்திரம். இதில் அநேகம் சித்திரப்படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

விலை ரூபாய் 2.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
135, தேவராஜ முதலி தெருவு, மதராஸ்

# Topics from Periodicals.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### வெற்றிலைப் போட்டுக்கொள்ளுதல்.

சாப்பாட்டிற்குப்பிறகு வெற்றிலைப்போட்டுக்கொள்ளும் வழக்கமானது நமது தேசத்தில் வெகுகாலந் தொட்டு வழக்கத்தில் இருந்துவருகிறது. இந்த வழக்கமானது சிலருக்குப் பிடிக்கிறதில்லை. சிலர் இதை வெறுக்கிறார்கள். சிலர் இதை ஆதரிக்கிறார்கள். ஸமீபத்தில் வெளிவந்த "வைத்திய கலாநிதி"யில் ஒரு நிருபர் இந்த வழக்கத்தைப்பற்றி ஒருவியாசம் எழுதியிருக்கிறார். அதில் அவர் குறிப்பிட்டுள்ள சிலவற்றை இங்கு எழுதுகிறோம்

வெற்றிலைப் போட்டுக்கொள்வது நல்ல வழக்கமென்று நிர்த்தாரணம் செய்ய, அமெரிக்கா முதலிய விசாலமான இதர நாடுகளிலும் அவ்விதம் எதையேனும் உணக்குப் பின்பு உபயோகிக்கும் வழக்கமே ஓர் ஆதாரமாகின்றது. புஜித்த உணவு நன்கு ஜீர்ணமாவதற்கு எற்ற சுறுசுறுப்பை ஜீர்ணகோசங்களுக்கு உண்டாக்கும் சக்தியும் இதை மெல்லுவதனால் விருத்தியடையும். உணவுக்குப்பிறகு பற்களைச் சுத்தம் செய்யவும் இது ஒத்தாசை செய்கின்றது; புஜிக்கும்போது பற்களின் இடுக்குகளில் புகுந்து நிற்கும் உணவின் துணுக்குகள் அவ்விடங்களிலேயே சில காலம் தங்கிவிட்டால் அவ்விடங்களில் பற்களில் சிதைவு நேரிட்டுவிடும்; அவ்விதம் வழக்கமாகச் சேரும் உணவுத்துண்டுகளை அவ்விடங்களிலிருந்து விலக்குவதற்கு வெற்றிலையைப்போட்டு மெல்லுதல் உதவியாயிருக்கும். வெற்றிலை மெல்லுவதனால் உமிழ்நீர் அதிகமாகப் பொசிய ஆரம்பிக்கும்; இது வெற்றிலையுடன் இரைப்பையிற் சேரும்; இதனால் ஜீர்ண சக்தி அதிகரிக்கும். நமது பள்ளிக்கூடச் சிறுவர்களும் வேலைக்குப்போகும் பிள்ளைகளும் மற்றும் உத்தியோகஸ்தர்களும் போஜனம் செய்யும்போது மிகத்துரிதமாக உணவுகளை நன்கு மெல்லுவதற்கும் ஸாவகாசமில்லாமல் விழுங்கி வேலைக்குப்போக அவஸரப்படுகிறார்கள் என்பது நமக்கு அனுபவத்தில் தெரிந்த விஷயம். அவ்விதம் விழுங்கும்போதெல்லாம் உமிழ்நீர் போதுமான அளவு அவ்வுணவில் கலப்பதற்கு வழியில்லை. ஆகவே, குடலில் அதற்குப்பிறகு நடந்தேற வேண்டிய ஜீர்ணசக்தி அத்தகையவர்களுக்குக் குறைவு பட்டுவிடும். அவஸரப்படாமல் புஜிப்பவர்களுக்குக் கூட உமிழ்நீர் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாய் உட்கொள்ளும் உணவில் கலக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு ஜீர்ணவேலையும் குடலில் எளிதாய் நடந்தேறும். இதற்காகவே வெற்றிலைப் போட்டுக்கொள்வது நல்ல அப்பியாஸமென்று நான் எழுதத் துணிந்தேன். வெற்றிலையை மெல்லும்போது ஸ்ரவிக்கும் மிருதியான உமிழ்நீர் இரைப்பையில் சென்று, இதற்குமுன்பு புஜித்துள்ள உணவோடு கலந்துகொண்டு அவ்வுணவு சீக்கிரம் சுலபமாய் ஜீர்ணம்செய்ய உபயோகமாகின்றது. மேலும் இரைப்பையில் புளிப்பு அதிகரிக்காமல் அவ்விடத்திய ஜீர்ணதிரவங்களை ஸமநிலைமையில் வைத்து குடலில் அம்லாதிக்யத்தினால் அழற்சி நேரிடாமல் காப்பதற்கும் உதவுகின்றது.

ஆகையினால், வெற்றிலைப்போடும் வழக்கம் ஒரு துராப்பியாஸம் என்று கூறுவதும், அவ்வாசாரமுள்ளவர்களைப் பழிப்பதும் சரியன்று.

---

### இந்தியாவின் வறுமை.

இந்தியா மிகவும் ஏழ்மையானதேசமென்பது பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். இதற்கான காரணங்களையும், இந்தியர்களின் வறுமையைப் போக்க என்னென்ன செய்யப்படவேண்டுமென்பதைப்பற்றியும் "ஜனாபிமானி" பின்வருமாறு எழுதியிருக்கின்றது.

#### வறுமையின் காரணங்கள்.

(1) வியவசாயிகள் தங்கள் வியவஸாயத்தொழிலில் தற்கால சாஸ்த்ரீய முறைகளை உபயோகிக்காமலும், நூதனமானவும் சீர்திருந்தியவுமான கருவிகளை உபயோகிக்காமலு மிருக்கிறார்கள்.

(2) வியவஸாயிகள் பொதுவாய் கல்வியறிவில்லாதவர்களாயும், அதனால் சாஸ்த்ரீய வியவஸாயம் தெரியாதவர்களாயு மிருக்கிறார்கள்.

(3) சிறுகைத்தொழிலாளிகள் தங்கள் தொழிலுக்கு வேண்டிவையான புதுமாதிரியான ஸாதனங்களை அறிந்து உபயோகிக்காமலிருக்கிறார்கள்.

(4) தற்காலம் மலிவான அயல்நாட்டு ஸாமான்கள் இந்தியாவில் விற்பதனால், தொழிலாளிகள் செய்யும் ஸாமான்களில் அதிக வியாபாரம் நடக்கவில்லை. இதனால் தொழிலாளிகள் தங்கள் ஸாமான்களை விற்கக் கஷ்டப்படுகிறார்கள்.

(5) அன்னியநாடுகளில் வீட்டுத்தொழில்களாக நடந்துவரும் கைத்தொழில்களோடு போட்டிபோட

அந்தமாதிரிக் கைத்தொழில்களை நாம் இன்னும் ஸ்தாபிக்கவில்லை.

(6) அன்னியதேசக் கைத்தொழில்களின் போட்டி இல்லாத புதுக்கைத்தொழில்களை நாம் இன்னும் ஸ்தாபிக்கவில்லை.

(7) நமது தேசத்தில் கைத்தொழில் கல்வி இல்லாததனால், ஒரு தொழிலிலும் தேர்ந்த தொழிலாளிகள் இல்லை.

(8) அதற்குப்பதிலாக தேர்ச்சிபெறாத வேலையாட்கள்தான் அதிகமா யிருக்கிறார்கள். வேலையாட்களில் பெரும்பாலர் கல்வியறிவில்லாத கூலியாட்களும், சிறு குமாஸ்தாக்களுமாவார்கள்.

(9) ஜனத்தொகை அதிகரிப்பதற்கேற்ப, புதுக் கைத்தொழில்களும், வியாபாரங்களும் ஏற்படவில்லை. அதனால் ஜனங்களில் பலர் வியவஸாயத்தில் பிரவேசித்து வருகிறார்கள். ஆனால் ஏற்கனவே வியவசாயத்தைக் கைக்கொண்டிருக்கும் ஜனங்களின் தொகை மிதமிஞ்சினதாயிருக்கின்றது.

(10) தற்காலம் ஜனங்களுக்கு வியாபாரக்கல்வியும் வியாபார ஊக்கமும் இல்லை. வியாபார முயற்சிகளுக்கு வேண்டிய வஸதிகளும் இல்லை.

(11) ஜனங்களுக்குப் போதுமான பொதுக்கல்வி இல்லாமலிருப்பதனால், அவர்கள் முன்னேற்றமடைவது முடியாமலிருக்கிறது.

(12) கிராமங்கள் ஸுகாதாரக் குறைவாக இருப்பதனாலும், கிராமங்களில் வைத்திய உதவிக்குத் தக்க ஏற்பாடுகள் இல்லாமலிருப்பதனாலும் மலேரியா முதலிய வியாதிகள் விருத்தியாகி பலசாலிகளான அநேக ஜனங்களை வேலைக்கு லாயக்கில்லாமல் செய்துவிடுகின்றன.

### வறுமையை நீக்கவழி.

நமது பொருளாதார நிலைமையைக் கெடுத்துவரும் காரணங்களுள் இவைகளே முக்கியமானவை.

நமது நிலைமையை விருத்தி செய்யப் பின்வருமாறு முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

(1) வியவசாயிகளுக்கு வியவசாயக்கல்வி கற்பிப்பதோடு, அவர்கள் தற்கால வியவசாய முறைகளை அனுஷ்டிக்க அவர்களுக்குப் பணம கடன்கொடுத்து உதவுவது.

(2) தொழிலாளிகளுக்கும் பொது ஜனங்களுக்கும் தொழில் கல்வி கற்பித்தல்; தொழில்கல்வி கற்றவர்கள் கற்றதொழிலை அப்யஸிக்க அவர்களுக்குப் பணம் கடன் கொடுத்து உதவுவது.

(3) நாட்டில் செய்யப்படும் ஸாமான்களை விற்பதற்கும், அவைகளைச் செய்வதற்கும் கம்பெனிகள் ஸ்தாபிப்பதை ஆதரித்தல்; ஸ்தாபிக்கப்பட்டுள்ள கம்பெனிகளுக்குப் பணவுதவி செய்தல்.

(4) தேசத்திலுள்ள இயற்கைப் பொருளாதாரங்களை உபயோகித்து ஸாமான்கள் செய்ய இந்தியர்களுடைய மூலதனத்தைக்கொண்டு கம்பெனிகள் ஸ்தாபித்தால் அவைகளுக்குப் பண உதவி செய்தல்.

(5) வீட்டுக் கைத்தொழில்கள் ஏற்படுத்துதல்.

(6) ஜனங்களுக்கு வியாபாரக்கல்வி கற்பித்தல்.

(7) கட்டாயப்படுத்தி இலவசமாகப் பிரைமரிக் கல்வி கற்பித்தல்.

(8) ஸுகாதாரமும்,வைத்ய உதவியும் ஏற்படும்படி செய்தல்.

## Books and Reviews.

## புஸ்தகங்களும், விமர்சனங்களும்.

[நாகரிகம்: சே. மு ராஜு செட்டியார் அவர்கள் இயற்றியது. விலை ரூ 2.]

இப்பெயர்கொண்ட தமிழ் நாவலொன்று நாம் வரப்பெற்றோம். இது பல நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ராஜு செட்டியார் அவர்களால் இயற்றப்பட்டது. கதையின் போக்கானது படிக்கப்படிக்க ஆச்சரியமும், ஆனந்தமும் உண்டாகும்படி வெகு நேர்த்தியாக அமைந்துள்ளது. இடையிடையே பற்பல நீதிகளும் அடங்கியுள்ளன. இக்காலத்திய நாகரிக விநோதங்கள் இதில் நன்கு எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. புஸ்தகம் சுமார் 500 பக்கங்கள் கொண்டது. இதன் விலை ரூ 2. வேண்டுவோர்: செ. மு. ராஜு செட்டியார் ராஜண்டேல், வால்டாக்ஸ்ரோட், சென்னை என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

[நடராஜன் நாடகம் சென்ற சம்பவம்: ச. தா. மூர்த்தி முதலியார் அவர்கள் இயற்றியது. விலை அணா 8.]

மேற்குறித்த புஸ்தகமொன்று நமது பார்வைக்கு வந்துள்ளது. இதை இயற்றியவர் பல புஸ்தகங்களை இயற்றியுள்ள ச. தா மூர்த்தி முதலியார் என்பவராவர். இந்த புஸ்தகத்தில் யௌவன ஸ்திரீகளும் புருஷர்களும் நாடகம் செல்வதனால் ஏற்படும் பற்பல தீங்குகளையும் நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. கதை எழுதப்பட்டுள்ள நடையானது மிகவும் தெளிவாக அமைந்துள்ளது. சிறுவர் சிறுமியர் ஆகிய எல்லோரும் இதைப் படிப்பது அவசியமாகும். புஸ்தகமானது நல்ல காகிதத்தில் வெகு நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது. இதன் விலை அணா 8. வேண்டுவோர்: நவீன கதா புஸ்தக சாலை, நெ. 8. சூளை, சென்னை என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## Education and Science.

## கல்வியும், சாஸ்திரமும்.

### கல்விச்சாலைகளில் வைத்திய பரிசோதனை.

இம்மாகாணத்திலுள்ள கல்விச்சாலைகளில் வைத்ய பரிசோதனை செய்யவேண்டிய விஷயமாய்க் கவர்ன்மெண்டார் ஓர் உத்தரவு வெளியிட்டிருக்கிறார்கள். அவ்வுத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றின் சாராம்சம் வருமாறு :—

மாகாணத்திலுள்ள கல்விச்சாலைப் பிள்ளைகளை வைத்தியப்பரிசோதனை செய்யும் விஷயமானது அந்தந்த உத்தியோகஸ்தர்களின் புத்தியைப்பொருத்ததாகும். ஆனாலும், கவர்ன்மெண்டார் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் பிள்ளைகளின் தேகஸ்திதியைப் பற்றி பரிசோதனை செய்யவேண்டியதற்கு லாயக்குள்ளவரும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டவருமான டாக்டரொருவரை நியமிக்கவேண்டுமென்றே சிபார்சு செய்திருக்கிறார்கள். அப்படி நியமிக்கப்பட்ட டாக்டர்கள் அந்தந்த பள்ளிக்கூடத்தின் உபாத்தியாயர்கள் அல்லது அதன் அதிகாரிகளுடன் கலந்து கொண்டு, புதிதாய் ஒவ்வொரு வருஷத்திலும் வந்து சேரும் பிள்ளைகள் வியாதிகளில்லாமலிருக்கிறார்களா என்று பரிசோதிக்கவேண்டும். அப்படி அவர்களுக்கு ஏதாவது வியாதி இருக்கும்பக்ஷத்தில், உடனே அதை அவர்கள் பெற்றோர்களுக்காவது போஷகர்களுக்காவது தெரிவிக்கவேண்டும். அவ்விதம் தெரிவிப்பதனால் அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இருக்கப்பட்ட வியாதிகளை அறிந்து அவற்றைப் போக்க வழிதேடுவார்கள்.

சில மாணவர்களுக்குக் கொடிய வியாதிகள் தோன்றியிருந்தால், அந்தந்த ஸ்கூல் தலைமை உபாத்தியாயர் மானேஜர் முதலியவர்கள் அவர்களைப் பள்ளிக்கூடத்தைவிட்டுப் போகச்சொல்லிவிடவேண்டும். அதனால் மற்ற பிள்ளைகளுக்கும் அவ்வியாதிகள் பரவாமலிருக்கும்.

பள்ளிக்கூடங்களில் நியமிக்கப்பட்ட வைத்தியர்கள் பள்ளிக்கூடக் கட்டடங்களையும் அவற்றைச் சுற்றியும் அடிக்கடி பரிசோதனை செய்து, அவைகளில் உள்ள சுகாதாரக் குறைவுகளை ஸ்கூல் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டும். அப்பால் ஸ்கூல் அதிகாரிகள் வித்யா இலாகாத் தலைவர் முதலியவர்களின் யோசனைகளைக் கலந்துகொண்டு பணவுதவிக்குத் தக்கபடி பரிகாரம் தேடவேண்டும்.

மேற்கூறிய யோசனைகளெல்லாம் பள்ளிக்கூடங்களைப் பொருத்தவையாகும். காலேஜ் மாணவர்களின் தேகஸ்திதியைப்பற்றி அந்தந்த காலேஜ் அதிகாரிகள் கவனித்தால் நலமாயிருக்கும். கவர்ன்மெண்டு ஸ்கூல்களிலும் ஸ்தல ஸபைகளுக்குட்பட்டிருக்கும் ஸ்கூல்களிலும் அந்தந்த ஸர்கிள் இன்ஸ்பெக்டர்கள் எவ்வித மான சுகாதார ஆபீஸர்களை நியமிக்கவேண்டுமென்று வித்யா இலாகாத் தலைவருக்கு ஒரு ரிபோர்ட்டு அனுப்பவேண்டும். அதன்மேல் கவர்ன்மெண்டார் தக்க ஏற்பாடுகளைச் செய்வார்கள். கவர்ன்மெண்டினிடமிருந்து பணச்சகாயம்பெறும் கல்விச்சாலைகளில் ஸ்கூல் மானேஜர்களே வைத்தியர்களை நியமிக்க வேண்டும். அப்படி சகாயம் பெறும் பள்ளிக்கூடங்களிலுள்ள மாணவர்களுக்கு அதற்கென்று ஏதாவது சம்பளம் வாங்கலாமாவென்ற விஷயம் மானேஜர்களின் அபிப்பிராயத்தைப் பொருத்திருக்கிறது.

—சுதேசமித்திரன்.

### இங்கிலாந்தில் கல்விச் சட்டம்.

இங்கிலாந்தில் கல்வி மந்திரியான மிஸ்டர் பிஷர் (Fisher) என்பவர் பார்லிமெண்டில் கல்வி ஸம்பந்தமாக ஒரு மசோதா கொண்டுவந்தார். அது இப்போது இங்கிலாந்திலும் வேல்ஸிலும் சட்டமாக அமுலுக்கு வந்துள்ளது. அந்தச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள் "விவேக போதினி"யில் பின்வருமாறு காணப்படுகின்றன :—

(1) ஐந்து வயதுக்கு மேலும், பதினான்கு வயதுக்கு உட்பட்டுமுள்ள பிள்ளைகள் கட்டாயமாகப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

(2) பிரதேச அதிகாரிகள் சந்தர்ப்பானுசாரமாக இந்தக் கட்டாய வயது வரையறையைப் பதினைந்தாக்கலாம்.

(3) 16 வயது வரைக்கும், சிற்சில வேளைகளில் 18-வயது வரைக்கும், சிறுவர்களுக்கு "தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்கள்" ஸ்தாபிக்கப்படவேண்டும்.

(4) இந்தத் தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்களில் வருஷமொன்றுக்குப் பிரதமத்தில் 280 மணி நேரமும், ஏழுவருஷங்களுக்குமேல் 320 மணி நேரமும் பிள்ளைகள் படிக்கவரவேண்டும்.

(5) 12 வயதுக்குக் குறைந்தபிள்ளைகளை யாதொரு தொழிலிலும் அமர்த்தக்கூடாது.

(6) 12 வயதுக்கு மேற்பட்டு 14 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை யாதொரு ஞாயிற்றுக்கிழமையிலும் இரண்டு மணி நேரத்துக்கு அதிகமாக வேலையில் அமர்த்தக்கூடாது.

(7) பிரதேச அதிகாரிகள் பிள்ளைகளின் தேகாரோக்கியத்துக்கும் சன்மார்க்கத்துக்கும் ஏற்ற ஸௌகரியங்களைச் செய்து கொடுக்கவேண்டும்.

(8) ஸெகண்டரிப் பள்ளிக்கூடங்களிலும் தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்களிலும் சிறுவர்களுக்கு இலவசமாக வைத்தியம் பார்க்க ஏற்பாடு செய்யப்படிருக்கிறது.

(9) இரண்டு வயதுக்கு மேற்பட்டு ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு "நாற்றங்கால்" பள்ளிக்கூடங்களைப் பிரதேச அதிகாரிகள் ஸ்தாபிக்கலாம்.

(10) சரீர வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு ப்ரத்யேகமான பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன.

(11) பிரதமப் பள்ளிக்கூடங்களில் சம்பளம் வசூலிக்கவே கூடாது.

## Agriculture and Co-operation.

## வியவசாயமும், கூட்டுறவும்.

வெங்காய விதைகள்.

வெங்காய மாஸூல் ஆனபிறகு அதில் நல்ல கிழங்குகளாகப் பொறுக்கி எடுத்துக்கொள்ளவேண்டும். நிலத்தை நன்றாக உழுது, நிரம்ப எருவிட்டு, அதில் அவற்றை ஒவ்வொன்றுக்கும் 18 அங்குலம் இடம் விட்டு நடவேண்டும். நட்டபிறகு மற்ற பயிர்களைப் போலவே களையெடுத்தலும் தண்ணீர் பாய்ச்சலும் செய்யவேண்டும். பயிர் பூக்க ஆரம்பித்த 5 மாஸங்களுக்குள் விதை உண்டாகும். ஏக்கர் 1-க்கு ஸுமார் 200 ராத்தல் விதை கிடைக்கும்.

நெற்பயிருக்கு உழவு.

நெல்லானது சேற்றில் பயிராகக்கூடியதாதலால், இதற்குப் புழுதியுழவு கூடாது. "நெல்லுக்கு நான் குழவு" என்ற சாதாரணப் பழமொழிபடி, பயிரிடப்படும் நிலமானது நான்குமுறைகள் நன்கு உழப்படவேண்டும். சேறானது மக்கவேண்டியிருப்பதனால், நான்கு நாட்களுக்கு ஒருமுறை உழப்படுவது நல்லது. நெற்பயிரின் வேர் தாராளமாக பூமிக்குள் சென்று பரவும்படி ஆழ உழவேண்டும். உழவுக்குத் தக்கபடிதான் பயிர் விளையும்.

சோளப்பயிருக்கு எரு.

சோளப்பயிருக்கு மிகவும் சிரேஷ்டமான எரு தொழு எருவேயாம். இதைத்தவிர, பின்வருவனவற்றையும் உபயோகிக்கலாம். சோளம் அறுவடையான பிறகு, அதை உழுது அதில் கொள்விதைத்து, அது பூப்பிடிக்கும் தருணத்தில் உழுதுவிட்டால், சிறந்த எருவாகும். கடலை துவரை முதலிய பயிர்களின் செடிகொடிகளை மக்கவைத்துப் போடுவதிலும் நல்ல பலன் கிடைக்கும். சோளப்பயிரை அடிக்கடி ஒரே நிலத்தில் பயிரிடாமல் மாற்றிப் பயிர்செய்வதும் நல்லது.

பிரண்டையின் உபயோகம்.

இது வேலிகளில் தானாகவே முளைக்கும். இதில் பலவகை உண்டு. இதை ஜனங்கள் துவையல்செய்து சாப்பாட்டில் உபயோகிக்கிறார்கள். இதை உபயோகிப்பதனால் அரோசிகம், மூலநோய் முதலியன நீங்கும். மாடுகள் தண்ணீர்குடியாமற்போனால், அவற்றின் நாக்கில் இதை அரைத்துக் கட்ட, அவை தண்ணீர்குடிக்கும்.

மணல்பூமியின் தன்மைகள்.

மணல்கலந்த பூமிக்கும் களிமண் பூமிக்கும் மிகுந்த வித்தியாஸம் உண்டு. களிமண்பூமிக்கு என்னென்ன குணங்கள் உண்டோ, அவற்றிற்கு எதிரிடையான குணங்கள் மணல்பூமிக்கு அமைந்துள்ளன. மணல் பூமியில் உழக்கருவிகள் மிகவும் சுலபமாக வேலை செய்யக்கூடும். அதில் தண்ணீர்பாய்ச்சினால், அடியில் இறங்கிவிடும். பயிர்பூண்டுகளுக்கு வேண்டிய சத்து அதில் ஒன்றும் இல்லை. இதை நல்ல நிலமாகத் திருத்தவேண்டுமானால், பின்வருவனவற்றைக் கவனித்துச் சீர்திருத்தம் செய்யவேண்டும்: மணலோடு களிமண்ணைச் சேர்க்கவேண்டும். மண்ணை அடிக்கடி கீழுமேலாகப் புரட்டவேண்டும. நன்கு மக்கின எருவை மண்ணோடு கலக்கவேண்டும். இதோடு பசுந்தாள் எருவையும் போடலாம். பலவித மரங்களையும் வைத்துப் பயிர்செய்யலாம். இம்முறைகளை அனுஸரித்தால்,மணல்நிலம் நன்கு சீர்திருந்தப்பெறுமென்பதில் ஐயமில்லை.

பசுந்தாள் எரு.

பசுந்தாள் எருக்களில் பலவகை உண்டு. அவற்றின் உபயோகத்தைப்பற்றி அவ்வப்போது நாம் எழுதி வருகிறோம். அவுரி, புங்கம், எருக்கம், நொச்சி, வேம்பு முதலியனவற்றை சேற்றில் மிதித்து மக்க வைத்து, உபயோகித்தால், நல்ல பலன் உண்டாகுமென்பதில் ஐயமில்லை. சப்பாத்தியும் இப்பச்சைஎரு இனத்தைச் சேர்ந்ததே. இதை வெட்டி ஒரு பள்ளத்தில் போட்டு, மேலே மண்ணைமூடி, கொஞ்சம்நாட்களுக்கு வைத்திருந்தால், பிறகு மட்கி சிறந்த எருவாகின்றது. தென்னை முதலியவற்றின் குழிகளுக்கு இச்சப்பாத்தியைப் போட்டால், அது சிறந்த எருவாகி மரத்தின் வேர்களுக்கு ஈரத்தைக் காத்துவரும்.

சில வியவஸாயப் பழமொழிகள்.

1. மணலுழுது வாழ்ந்தவனுமில்லை, மண்ணுழுது கெட்டவனுமில்லை.

2 உள்ளூர்ப்பெண்ணும், அயலூர் மண்ணும் ஆகாது.

3. அழுதுகொண்டிருந்தாலும், உழுதுகொண்டிரு.

4. உழவால் பயிராகிறது எருவால் பயிராகாது.

5. களைஎடாதவன் விளைவெடான்.

6. உரம் உதவுவது ஊரார் உதவமாட்டார்.

7. கோரை குடியைக் கெடுக்கும்.

8. ஆட்டுரம் அந்தவருஷம்,மாட்டுரம் மறுவருஷம்

9. உழுதசேர் காய்ந்தால், உழக்கு நெல்லும் காணாது.

10. கரம்பு உழுது கம்பு விதை.

11. அகல உழுவதை ஆழ உழு.

12. களைபிடுங்காப்பயிர் கால் பயிர்.

13. ஊரான் ஊழவு முழ எருவுக்குச் சமானம்.

## Industry and Commerce.

## கைத்தொழிலும், வியாபாரமும்.

### திருவாங்கூரில் பென்ஸில்தொழில்.

ஒரு தேசம் முற்போக்கடைவதற்குக் கைத்தொழில்களே ஆதாரமாயிருக்கின்றன. இந்தியாவானது ஏராளமான இயற்கைப் பொருள்களைக் கொண்டுள்ளதாயும், கைத்தொழிலபிவிருத்திக்கு எற்ற நாடாயுமிருந்தும், பொதுஜனங்களுக்குப் போதுமான அளவு கல்வியறிவும் ஊக்கமும் இல்லாததனுல், எத்தொழிலும் முன்னுக்குவா மிருந்த சிரமமாயிருக்கின்றது. மைசூர்போன்ற சம்ஸ்தானங்களில் தொழில் அபிவிருத்தியானது பலதுரைகளிலும் நன்கு முற்போக்கடைந்து வருகின்றது. திருவாங்கூர் சமஸ்தானத்தில் பென்ஸில் தொழில் செய்வதற்கான வசதிகள் இருந்துவருகின்றன. இத்தொழிலுக்கு அவசியம் தேவையான மூலப்பொருள்கள் இரண்டு. அவை பென்ஸில்கட்டை செய்வதற்கான சிறந்த மரமும், க்ராபைட் என்னும் காரீயமுமாம். இவையிரண்டும் அந்த ஸம்ஸ்தானத்தில் ஏராளமாகக் கிடைக்க வசதியுண்டு. அங்குக் காரீயம் மிகுதியாகக் கிடைக்கக் கூடுமென்று அந்த சம்ஸ்தானத்து தொழில் இலாகா அதிகாரி கூறுகிறுர். இந்த க்ராபைட்டானது பெங்களூர் இந்திய தாதுப்பரீக்ஷா சாலையில் பரீக்ஷை செய்யப்பட்டதில், அது பென்ஸில் செய்வதற்கு மிகவும் சிறந்ததாயும் சுத்தமாயும் இருக்கின்றதென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பென்ஸில் தொழிலுக்குத் தேவையான இரு மூலப்பொருள்களும் திருவாங்கூர் சமஸ்தானத்தில் சௌகரியமாகக் கிடைத்துவிட்டதனுல், அங்கு இத்தொழிலானது வெகு சீக்கிரத்தில் முன்னுக்கு வருமென்பதில் ஐயமில்லை.

### தோல்பதனிடுந் தொழில்.

பற்பல காரணங்களால் இந்தியாவில் கால்நடைகள் க்ஷீணித்து வருகின்றன. அப்படிக்கிருந்தும், தோல்களின் உற்பத்தியில் இந்தியா முதன்மையான ஸ்தானத்தை வகிக்கின்றது. உலகமுழுதும் வெள்ளாட்டுத் தோல்கள் எவ்வளவு கிடைக்குமோ அதில் மூன்றில் ஒருபங்கு இந்தியாவில் கிடைக்கின்றன. இப்போது முடிவான யுத்தத்தில் சேனைகளுக்குத் தேவையாயிருந்த பூட்ஸ்கள் இந்தியாவில் கிடைத்த தோல்களிலேயே தயாரிக்கப்பெற்றவை, க்ரேட்பிரிட்டினில் 60 லட்சம் மாடுகளும் 870 லட்சம் ஆடுகளும் உள்ளன. ஆனுல், இந்தியாவிலோ, 1,800 லட்சம் மாடுகளும் 870 லட்சம் ஆடுகளும் இருக்கின்றன. இவையல்லாமல், தோல் பதனிடுவதற்காக இயற்கைப் பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன. அப்படியிருந்தும், தோல்பதனிடுந் தொழிலானது இத்தேசத்தில் முற்போக்கடையவில்லை. இங்கே கிடைக்கும் தோல்கள் அந்நிய நாடுகளுக்குப்போய் அங்கே தயாரிக்கப்பட்டு, பிறகு இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனுல், அந்நியநாட்டினர் ஏராளமான லாபத்தையடைந்து வருகின்றுர்கள். இத்தொழிலானது இந்தியாவில் விருத்தியானுல், நம்முடைய ஜனங்கள் பிழைப்பதோடு, பணம்போடும் நம்மவர்களுக்கு நல்ல லாபமும் கிடைக்குமல்லவா!

### வியர்த்தமே.

1. லாபகரமான தொழில்களிலும் வியாபாரங்களிலும் போட்டுப் பலனடையாமல், பாரம்பரையில் கிடைத்த ஸொத்துக்களைப் புதைத்துவைப்பதுபோல் சும்மாவைத்திருப்பதும், அதைப்பற்றிக் கவலை கொண்டிருப்பதும் வியர்த்தமே. காளடைவிலே அது இல்லாமலும் போய்விடும்.

2. மழுங்கலும் திறமையற்றதுமான ஆயுதங்களைக் கொண்டும், வயிற்றுக்கு ஒன்றுமில்லாமலும் வேலை செய்தல் வியர்த்தம். அவ்வாறு வேலைசெய்வதனுல் நாளுக்குநாள் உடம்பு இளைத்துவருமென்பதோடு, வைத்தியனுக்கும் பணம்கொடுக்கவேண்டியிருக்கும்.

3 நம்மால் வகித்து நிர்வகிக்கக்கூடியதைவிட அதிகமான கால்நடைகளை வைத்திருப்பதும், ஒரே வயலில் அவைகளை நாளக்குநாள் மேய்த்துவருவதும் வியர்த்தமாகும். ஏனென்றுல், அவைகளுக்குத் தகுந்த அளவு தீவனம் கிடைக்காமல் போய்விடும்.

4. மனிதன் தன் நெற்றி வியர்வை நிலத்தில் விழும் வண்ணம் வேலைசெய்து ஜீவிக்கவேண்டியதுதான். ஆகவே, ஒவ்வொருவனும் தனக்கும் தன் ஸமூஹத்தினருக்கும் உபயோகமாயிருக்கக்கூடிய ஏதேனும் ஒரு தொழிலைப் பார்த்துவரவேண்டும். ஆனுல் எவரும் ஓய்வில்லாமலாவது உல்லாஸப்பொழுதுபோக்கில்லாமலாவது இருத்தலும், வரம்புகடந்து வேலைசெய்தலும் வியர்த்தமாகும்.

5. இரண்டுவார்த்தை பேசவேண்டிய இடத்தில் இருபதுவார்த்தைகள் பேசுவதும், ஏதோ காரியமாகப் போகும் மனிதனைப் பேச்சுக்காக நிறுத்திவைத்தலும் வியர்த்தமே.—சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

## Sanitation and Medicine.

### சுகாதாரமும், வைத்தியமும்.

ஸ்நானம் செய்கிறவர்கள் கவனிக்கவேண்டியவை.

1. குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்கிறதாயிருந்தால், 10 அல்லது 12 நிமிஷத்திற்கு அதிகமாகத் தண்ணீரில் இருப்பது தீமையான காரியம்.

2. ஸ்நானம் பண்ணுங்கால் தேகத்தை நன்றாய்த் தேய்த்துச் சுத்திபண்ணவேண்டும்.

3. ஸ்நானம் செய்தவுடனே ஈரமற்ற மிருதுவான ஒரு துவாலைத்துணியைக்கொண்டு உடம்பை நன்றாய்த் துவட்டிவிட்டுப் பின்பு ஒரு முரட்டுத் துவாலையைக்கொண்டாவது, அல்லது பிளானல் கம்பளித் துணியைக்கொண்டாவது 4 அல்லது 5 நிமிஷ நேரமட்டும் தேகமெங்கும் நன்றாய்த் தேய்த்தல்வேண்டும். மார்பு, வயிறு, இடுப்பு, முழங்கால், கணுக்கால் முதலிய பொருத்தங்கள் ஆகிய இவைகளை விசேஷமாய்த் தேய்க்கவேண்டும். இப்படி தேய்க்கிறதனால் தோலானது சற்றுச் சிவந்து தேகமெங்கும் ஆரோக்கியமான ஒருவித அனல் உண்டாகும். குளிர்ந்த தண்ணீர் ஸ்நானத்திற்குப் பின்பு தேகத்தில் உண்டாகிற இந்த அனலினால்தான் சரீரத்திற்குச் சுகம் உண்டாகிறது. இந்த அனல் உண்டாகாவிட்டால், குளிர்ந்த தண்ணீர் ஸ்நானத்தில் நன்மை ஒன்றுமில்லை. ஆகையால், ஒருவன் ஸ்நானம் பண்ணினபின்னர் உடம்பைத் துவட்டிவிட்டு முரட்டுத் துவாலைக்கொண்டு தேகத்தைத் தேய்த்தபின்னும், சரீரத்தில் அனலுண்டாகாமல் ஒருவகையான குளிர் இருந்தால், அது அவன் தகாத நேரத்தில் ஸ்நானம் பண்ணினனென்றாவது அல்லது வெகுநேரமாகத் தண்ணீரிலிருந்துவிட்டானென்றாவது காட்டுகிற அடையாளம். எக்காரணத்தினாலாவது அனலுண்டாகத் தாமதப்பட்டால், விரைவாய் நடத்தல் ஓடுதல் முதலிய தேகப்பயிர்ச்சிகளைச் சற்றுநேரஞ் செய்து அனலை உண்டாக்கிக்கொள்ளவேண்டும்.

—சக்ரவர்த்தினி.

ப்ளேக் வியாதியில் புகையிலையின் உபயோகம்.

ப்ளேக் வியாதியைப் பரவச்செய்வதற்குத் தெள்ளுப்பூச்சிகளே காரணமாயிருக்கின்றன. அவற்றைப் புகையிலை வெகு சீக்கிரத்தில் கொன்றுவிடுகிறது. தெள்ளுப்பூச்சிகள் வீட்டிற்குள் நுழையாமலிருந்தால், ப்ளேக் வியாதி பரவுவதுவிராது. இதற்கு ஜனங்கள் தூங்குகிற வீட்டுத் தரைகளின்பேரில் புகையிலையைப் பரப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வதனால், தெள்ளுப்பூச்சிகள் உள்ளே நுழைந்தவுடன் சாகின்றன இம்முறையானது பரிசோதிக்கப்பட்டு பலன் கண்டிருக்கிறது.

## General Notes.

### பொதுக் குறிப்புக்கள்.

கண்ணாடியைச் சுத்தஞ்செய்யும் முறை.

சில ஸமயங்களில் ஜன்னல்கள் முதலியவற்றிற்கு உபயோகிக்கும் தட்டைக்கண்ணாடிகளில் கீறல்கள் ஏற்படுவதுண்டு. அவற்றைப் போக்க, மெல்லியதான சிறு துணியை ஸ்பிரிட் எண்ணெயில் நனைத்து கீறல்பட்ட கண்ணாடியின்மேல் கொஞ்சநேரம் தேய்த்துப் பிறகு, ஒரு சிறு பட்டு அல்லது தோலைக்கொண்டு தேய்த்தால், கீறல்கள் மறைந்து கண்ணாடி சுத்தமாய்விடும்.

மரஸாமான்களிலுள்ள கீறல்களைப் போக்கல்.

நாற்காலி மேஜை முதலான மரஸாமான்களில் கீறல்கள் ஏற்படுவது ஸகஜம். அப்படி எவையேனுமிருந்தால், சிறிய பிரஷ்ஷில் ஷெல்லெக் என்னும் அரக்குசேர்ந்த வார்னிஷை கீறல் உண்டாயிருக்குமிடத்தில் விட்டு நிரப்பிவிடவேண்டும். பிறகு, பள்ளங்கள் அடைபட்டுச் சரியாய்ப்போய்விடும். வார்னிஷ் காயும்வரை அதைத் தொடுவது கூடாது.

உருளைக்கிழங்கு பசை.

உருளைக்கிழங்கு நன்கு வெந்தவுடன் கொஞ்சம் ஆறியதும், அதை ஒரு காகிதத்தின்மேல் போட்டுத் தேய்த்து எடுத்தால், நன்கு ஒட்டக்கூடிய பசை கிடைக்கும்.

உடையின் மண்கறையைப் போக்குதல்.

நாம் தரிக்கும் உடைகளில் மண்கறைகள், சில ஸமயங்களில், எவ்வளவுநேரம் தோய்த்தாலும் போவதில்லை. அதற்கு, கறைபட்ட இருபுறங்களிலும் உருளைக்கிழங்கினால் தேய்த்தபிறகு தோய்த்தால், சீக்கிரத்தில் விட்டுவிடும்.

புஷ்பங்கள் வாடாமலிருக்கச் செய்தல்.

புஷ்பங்களை வேறு ஊர்களுக்குத் தபால்மூலமாய் அனுப்பவேண்டுமானால், அவை அங்குப் போய்ச் சேருவதற்குள் வாடிப்போகின்றன. இதற்கு, அனுப்பவேண்டிய புஷ்பங்களை இராக்காலத்தில் பறித்து தண்ணீர்த்தொட்டியில் வைத்திருந்து, விடியற்காலத்தில் எடுத்துப் பாக்செய்துவிட்டால், அவை கெடாமலிருக்கும்.